# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 176 குரோதி வருடம், மாசி மாதம் 12ஆம் திகதி திங்கட்கிழமை
(24.02.2025) ஹிஜ்ரி 1446, ஷஃபான் - 25, 0115 886187 - விலை ரூ.40 பக்கங்கள் 12





தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசனின் புதல்வரது திருமணம் சனிக்கிழமை பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றது.

அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள், இராஜதந்திரிகள், ஊடகவியலாளர்கள் என்று கூட்டம் எக்கச்சக்கம். ஜனாதிபதி அங்கு வரவிருந்தும் வர முடியாமல் போனதால் சுனில் ஹந்துன்நெத்தியை அனுப்பினாராம். எதிர்க்கட்சித் தலைவர் சஜித், முன்னாள் ஜனாதிபதிகளான ரணில், மைத்ரி, சந்திரிகா, முன்னாள் சபாநாயகர் கரு, ஹக்கீம், சுமந்திரன் உட்பட்ட அரசியல் பிரமுகர்கள் சந்தித்துக்கொண்டதால் அங்கு ஒரே அரசியல் பேச்சாக இருந்ததாம்.

ராஜபக்ஷமார் எவருக்கும் அழைப்பில்லை என்பது அங்கு கவனிக்கப்பட்ட விடயம். மனோ கணேசன் வடக்கு மக்களுடன் நெருங்கிப் பழகுபவர். போர்க்காலத்திலும் ராஜபக்ஷக்களுக்கு எதிராக கொழும்பில் துணிந்து குரல்கொடுத்தவர். எனவே, ராஜபக்ஷக்களின் வருகையைவிட தனது மக்களின் உறவு முக்கியம் என்று அவர் கருதியிருக்கலாம் என்று திருமண வீட்டுக்கு வந்திருந்த சிலர் கிசுகிசுத்ததை கேட்க முடிந்தது.






# தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை!



## ● ஜனாதிபதி அநுர கண்டியில் தெரிவிப்பு
## ● தேர்தல் விரைவில் வருமெனவும் அறிவிப்பு

எம்.ஏ.அமீனுல்லா

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைக்க வேண்டுமென எதிர்க்கட்சிகள் முன்மொழிந்திருப்பதாகவும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மிக விரைவில் நடத்த அரசாங்கமாக தாம் தயாராகவுள்ள நிலையிலேயே எதிர்க்கட்சிகள் இவ்வாறு தேர்தலை ஒத்திவைக்க வேண்டுமென முன்மொழிந்திருப்பதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நேற்று (23) மல்வத்து மற்றும் அஸ்கிரிய மகாநாயக்கர்களைச் சந்தித்து ஆசிபெற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

''உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு தற்பொழுது எந்தவொரு சட்டச்சிக்கலும் கிடையாது. தேர்தல் இடம்பெறுவதற்கான அவசிய சட்டவரைபு சீராக்கப்பட்டுள்ளது. தேர்தல் செலவுக்கான நிதியையும் ஒதுக்கியுள்ளோம்.

ஆகவே, தேர்தலுக்கான திகதியை அறிவிக்க தேர்தல் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உள்ளது. ஆதலால், ஆணைக்குழு தேர்தலுக்கான திகதியை மிக விரைவில் அறிவிக்குமென நான் நம்புகிறேன்.

பாதாள உலகக் குழுக்களுக்கிடையிலான மோதல்கள் தேசிய...

» 02 பக்கம்

## பாப்பரசரின் உடல் நிலை கவலைக்கிடம்



» 10 பக்கம்

## உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் சங்கு சின்னத்தில் களமிறங்க இணக்கம்

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் பெரும்பாலான தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து சங்கு சின்னத்தில் களமிறங்க யாழ்ப்பாணத்தில் நேற்று (23) இடம்பெற்ற ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டத்தில் இணக்கம் ஏற்பட்டுள்ளது.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிகள் உட்பட, சி.வி.விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி, ஐங்கரநேசனின் தமிழ்த் தேசிய பசுமை இயக்கம், மு.சந்திரகுமாரின் சமத்துவக்கட்சி, இலங்கை தமிழரசுக் கட்சியில் இருந்து பிரிந்த ஈ.சரவணபவன் அணி, கே.வி. தவராஜா அணி ஆகியவை இணைந்து சங்கு சின்னத்தில் தேர்தலில் போட்டியிடவுள்ளன.



## பி.பி.சி. தமிழோசை ஆனந்தி காலமானார்



தமிழ் ஒலிபரப்பில் முன்னோடியாக விளங்கிய திருமதி ஆனந்தி சூரியப்பிரகாசம் கடந்த வெள்ளிக்கிழமை (21) காலமானார்.

யாழ்ப்பாணம் சாவகச்சேரியைச் சேர்ந்த அவர், பி.பி.சி. தமிழோசையில் மூத்த தயாரிப்பாளராகப் பல ஆண்டுகள் பணியாற்றி, ஊடகத்துறையில் குறிப்பிடத்தக்க சேவையாற்றினார்.

மேலும், 2006ஆம் ஆண்டுக்கான சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியத்தின் தலைவராகத் தெரிவாகி, தமிழ் ஊடக உலகில் தனது ஒப்பற்ற பணி மூலம் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நீதிமன்ற துப்பாக்கிச்சூட்டின் பின்னணியில் வெளியாகும் முக்கியமான தகவல்கள்



### துப்பாக்கிதாரியை ஏற்றிச்சென்ற வேன் பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு சொந்தமானதாம்

புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்ட பாதாள உலகக் குழுத் தலைவர் கனேமுல்ல சஞ்சீவவை சுட்டுக்கொன்றவரின் காதலி மஹரகம பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு சாட்சியங்கள் பதிவுசெய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார்.

மஹரகம, பமுனுவவில் உள்ள ஒரு மசாஜ் நிலையத்தில் பணிபுரியும் இந்தப் பெண், முக்கிய சந்தேக நபரான மஹரகம, தம்பஹேன வீதியில் வசிக்கும் முச்சக்கரவண்டி...

» 02 பக்கம்

## இலங்கை அரசாங்கத்தினால் 15 அமைப்புகளுக்குத் தடை

தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட 15 அமைப்புகள் தடைசெய்யப்பட்டுள்ளதாக அதிவிசேட வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சம்பத் துய்யகொந்தாவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

தடைசெய்யப்பட்ட அமைப்புகளின் அனைத்து நிதி சொத்துகள் மற்றும் பொருளாதார வளங்கள் முடக்கப்பட்டுள்ளன. அதே நேரத்தில், பயங்கரவாதத்துடன் தொடர்புடைய 222 நபர்களின் பட்டியலும் இந்த அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

தடைசெய்யப்பட்ட அமைப்புகளில் தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழர் புனர்வாழ்வு அமைப்பு, தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, உலக தமிழர் இயக்கம், நாடு கடந்த தமிழீழ அரசு, உலக தமிழர் நிவாரண நிதியம், தலைமையகக் குழு உள்ளிட்ட பல அமைப்புகள் இடம்பெற்றுள்ளன.

அத்துடன், தேசிய தௌஹீத் ஜமாஅத், ஜமாதே மிலாதே இப்ராஹிம், விலாயத் அஸ் செய்லானி, கனேடிய தமிழர் தேசிய அவை, தமிழ் இளைஞர் அமைப்பு, தாருல் ஆதர் அத்தபவியா, இலங்கை இஸ்லாமிய மாணவர் ஒன்றியம், சேவ் த பேர்ள்ஸ் போன்ற அமைப்புகளும் இந்தத் தடையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கை நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் மேலும் விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப் படுமெனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## உள்ளூராட்சித் தேர்தலில் நுவரெலியாவை கைப்பற்றுவோம்!

### திகாம்பரம் எம்.பி. உறுதி



எஸ்.கணேசன்

மலையக மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இன்னும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லையெனவும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தைக் கைப்பற்றுவதற்கு முயற்சிக்கின்றோம் எனவும் தொழிலாளர் தேசிய சங்கத் தலைவரும் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் தொழிலாளர் தேசிய முன்னணி என்பவற்றின் முக்கியஸ்தர்களுடனான கலந்துரையாடல், ஹட்டன் டி.கே.டபிள்யூ...

» 02 பக்கம்

## பொலிஸ் ஆணைக்குழுவுடன் பதில் ஐ.ஜி.பி. முரண்பாடு

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளின் இடமாற்றம் தொடர்பாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு (NPC) மற்றும் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய ஆகியோருக்கிடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சர்ச்சை அரசியலமைப்பு பேரவை வரையில் சென்றுள்ளது.

முன்னதாக பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய நியமனங்களைச் செய்யும் பொறுப்பை தனக்கு வழங்குமாறு கோரி தேசிய பொலிஸ் ஆணையகத்துக்கு கடிதம் எழுதியிருந்தார். ஆனால், அந்தக் கோரிக்கையை ஆணையகம் நிராகரித்திருந்தது.

பொலிஸ் திணைக்களத்தின் உள் பணிகளில் தேசிய பொலிஸ் ஆணையகம் தலையிடுவதாகக் கூறியே அவர் இந்தப் பொறுப்பைத் தம்மிடம் தருமாறு கோரியிருந்தார்.

இந்தக் கோரிக்கைக்கு சட்ட மா அதிபரின் அனுமதியும் இருந்ததாக பதில் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் நியமனங்கள் அல்ல, இடமாற்றங்களே மேற்கொள்ளப்படுவதால் அதனை பதில் பொலிஸ் மா அதிபர் மேற்கொள்ளலாம் என்பதே சட்ட மா அதிபரின் பரிந்துரையாக...

» 02 பக்கம்






## அமெரிக்க நிதி நிறுத்தத்தால் இலங்கைத் திட்டங்கள் பாதிப்பு

### ஐ.நா. கவலை

அமெரிக்காவின் வெளிநாட்டு உதவிகள் நிறுத்தப்பட்டிருப்பது இலங்கையில் பல முக்கியமான திட்டங்களைப் பாதித்துள்ளன.

அவற்றில் உணவுப் பாதுகாப்பு, பொருளாதார சீர்த்திருத்தங்கள், ஜனநாயக நிர்வாகம், ஊழல் எதிர்ப்பு, எல்லைப் பாதுகாப்பு உட்பட்டவையும் அடங்குமென்று இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் ஆண்ட்ரே ஃபிரான்ச் கூறியுள்ளார்.

» 02 பக்கம்




# யாழ். பதில் அரசாங்க அதிபரின் வாகனம் விபத்து



யாழ்ப்பாணம் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனின் வாகனம் நேற்று (23) விபத்துக்குள்ளாகியுள்ளது.

பதில் அரசாங்க அதிபரின் மகன் வாகனத்தை செலுத்திச் சென்றவேளை கந்தன்மடம் பகுதியில், கட்டுப்பாட்டை இழந்த வாகனம் மரத்துடன் மோதி இந்த விபத்துச் சம்பவித்துள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த, அரச அதிபரின் மகனும் அவரது நண்பரும் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# சுழிபுரம் கடற்கரை பகுதிகளில் கிளீன் ஸ்ரீலங்கா செயற்றிட்டம்



*சாவகச்சேரி நிருபர்*

சுழிபுரம் கடற்கரை பகுதிகளில் கிளீன் ஸ்ரீலங்கா செயற்றிட்டம் “அழகிய தீவு புன்னகைக்கும் மக்கள்” எனும் தொனிப்பொருளில் நேற்று (23) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றிருந்தது.

சங்கானை பிரதேச செயலர் கவிதா உதயகுமார் தலைமையில் சுழிபுரம் திருவடிநிலை, புளியந்துறை, சவுக்கடி ஆகிய கடற்கரை பகுதிகளில் காலை 08 மணிமுதல் மதியம் 11 மணிவரை குறித்த திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது சுழிபுரம் மேற்கு அலைமகள் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தினர், வலிகாமம் மேற்குப் பிரதேச சபையினர், பொதுமக்கள், சங்கானை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

குறித்த திட்டத்தில் ஈடுபட்டிருந்தோருக்கு சுழிபுரம் மேற்கு அலைமகள் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தினரால் தாகசாந்தி மற்றும் காலை நேர சிற்றுண்டி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தேசிய பாதுகாப்புக்கு...

பாதுகாப்புக்கு எந்த வகையிலும் அச்சுறுத்தல் ஏற்படுத்தவில்லை. பாதாள உலகக் குழுக்களுக்கு இடையிலான மோதல்கள் பாதாள உலகக் குழுக்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதா அல்லது இவை அனைத்தும் யாரோ ஒருங்கிணைக் கப்பட்டு முன்னெடுக்கப்படுகின்றனவா என அறிவதற்கு இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்பொழுது பாதாள உலகக் குழுக்களுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இந்தச் சம்பவங்கள் தேசிய பாதுகாப்புக்கு எந்த அச்சுறுத்தலையும் ஏற்படுத்தவில்லை.

இதை முற்றிலுமாக கட்டுப்படுத்த அரசாங்கத்துக்கு முடியும் என்று உறுதியாக நம்பப்படுகிறது. நீண்ட காலமாக வளர்ந்த இந்தக் குழுக்களின் உறவுகளும் செயற்பாடுகளும் பல்வேறு துறைகளிலும் அமைப்புகளுக்கும் பரவியுள்ளன.

இது தற்போது ஓர் அழிவு பாதையினை நோக்கிச் செல்கின்ற அளவுக்கு வியாபித்துள்ளது. இந்த நடவடிக்கைகளை முற்றிலுமாக அடக்கி ஒடுக்க பெரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தப் பணியை நம்மால் வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது. இவை அனைத்தும் அரசியல் அனுசரணையின் கீழ் உருவாக்கப்பட்டவையாகும். இப்போது அவர்களுக்கு அந்த அரசியல் பாதுகாப்பு கிடைக்காது என்பதை திண்ணமாகக் கூறலாம்.

இவை அனைத்தும் பாதாள உலகக் கும்பல்களுடன் மற்றைய பாதாள உலகக் கும்பல்களுக்கு இடையிலான மோதலா? அல்லது இதன் பின்னணியில் யாரோ ஒருவரால் ஒழுங்கமைக்கப்பட்டு இயக்கப்பட்டதா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது. எதுவாக இருந்தாலும் தற்பொழுது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளன. இந்நிகழ்வில் அமைச்சர் சமந்த வித்யாரத்ன, பிரதி அமைச்சர்களான ஹன்சக விஜேமுனி, பிரசன்ன குணசேன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## பொலிஸ் ஆணைக்குழுவுடன்...

இருந்தது என்று பதில் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், வகுக்கப்பட்ட நடைமுறையிலிருந்து விலக முடியாது என்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்து விட்டது.

ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி லலித் ஏகநாயக்க தலைமையில் இந்த ஆணையகம் செயற்படுகிறது.

ஓய்வுபெற்ற அமைச்சக செயலாளர் ரேணுகா ஏக்கநாயக்க, ஓய்வுபெற்ற மாவட்டச் செயலாளர் கே. கருணாகரன், சட்டத்தரணி தில்சான் கபில ஜெயசூரிய, ஜனாதிபதி சட்டத்தரணி ஏ.ஏ.எம். இலியாஸ் மற்றும் ஓய்வுபெற்ற பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜெயந்த ஜெயசிங்க ஆகியோர் ஆணைக்குழுவின் மற்ற உறுப்பினர்களாக உள்ளனர்.

## உள்ளூராட்சித் தேர்தலில்...

மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இதில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் நிதி செயலாளர் சோ.ஸ்ரீதரன், இளைஞர் அணி தலைவர் பா.சிவநேசன், கட்சி உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

உள்ளூராட்சிசபைத் தேர்தல், தற்போதைய அரசியல் நடப்புகள் பற்றியும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

இச்சந்திப்பின் பிறகு ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட திகாம்பரம் எம்.பி.,

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு நாம் தயாராகி வருகின்றோம். இது சம்பந்தமாக தோட்டத் தலைவர்கள் உட்பட கட்சி பிரமுகர்களுடன் கலந்துரையாடினோம்.

தற்போதைய அரசாங்கம் வாய்வீச்சு அரசாங்கமாகவே உள்ளது. செயலில் எதுவும் நடப்பதாக தெரியவில்லை.

மலையக மக்கள் கடந்தமுறையும் தேசிய மக்கள் சக்திக்கு 50 ஆயிரம் வரையான வாக்குகளையே வழங்கினர். மலையகத்திலுள்ள கட்சிகளுக்குதான் கடந்தமுறையும் வாக்குகளை வழங்கினார்கள்.

மலையக மக்களுக்கு 10 பேர்ச்சஸ் காணி வழங்கப்படும் என்றார்கள், எதிரணியில் இருக்கும்போது மலையக மக்கள் தொடர்பில் அதிகம் கதைத்தார்கள். தற்போது அதிகாரத்தில் இருக்கும்போது தீர்வை முன்வைக்காமல் உள்ளனர்.

வரவு - செலவுத் திட்டத்தில்கூட மலையகத்துக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்படவில்லை. ஒதுக்கப்பட்ட நிதியில்கூட இந்திய நிதியே பெருமளவு உள்ளது.

தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வுகூட கைகூடுமா என தெரியவில்லை. எனவே, தோட்டத்தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளராக்குவதன்மூலமே இந்தச் சம்பள பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை காணமுடியும்” - என்றார்.

## அமெரிக்க நிதி...

இந்தத் திட்டங்கள் சிவில் சமூகம், தனியார் துறை மற்றும் மேம்பாட்டு கூட்டாளர்களின் ஆதரவுடன் மேற்கொள்ளப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபையைப் பொறுத்தவரை, அமெரிக்க உதவி அதன் ஆண்டு ஒதுக்கீட்டில் சுமார் 12 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்று ஃபிரான்ச் கூறியுள்ளார்.

இந்த மாத ஆரம்பத்தில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தனது நாடு, ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்க நிதி மற்றும் ஈடுபாடு குறித்த பொதுவான மதிப்பாய்வை மேற்கொள்ளும் என்று அறிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்காக பொலிஸாரை நியமிப்பதில் இதுவரை தீர்மானமில்லை

## பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்க பொலிஸாரை நியமிப்பது குறித்து அரசாங்கம் இன்னும் எந்த முடிவும் எடுக்கவில்லை என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

அனைத்து எம்.பிக்களுக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அது தொடர்பாக பதிலளித்த அமைச்சர் விஜேபால, எதிர்க்கட்சி எம்.பிக்கள் குழு கோரிக்கை விடுத்திருந்தாலும் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்றார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பான தற்போதைய அரசாங்கக் கொள்கையில் எந்த மாற்றமும் இல்லை.



சில பாராளுமன்ற உறுப்பினர்கள் பொலிஸ் பாதுகாப்புக்கான கோரிக்கைகளை விடுத்துள்ளனர். மேலும் நிலைமையை மதிப்பாய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு சபாநாயகர் பதில் பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்துள்ளார்.

மேலும், பாதுகாப்பு கோரிய எம்.பிக்கள் எதிர்கொள்ளும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் குறித்து அறிக்கை தயாரிக்க பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு பணிக்கப்பட்டுள்ளது.

அறிக்கைகளை மதிப்பாய்வு செய்த பிறகு, தேவைப்பட்டால் மட்டுமே சம்பந்தப்பட்ட எம்.பிக்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படும்.

ஆளுங்கட்சியைச் சேர்ந்த எவரும் பாதுகாப்பு கோரிக்கைகளை வைக்கவில்லை. கூடுதலாக, தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, எம்.பிக்களின் வீடுகளையும் அவர்கள் கலந்துகொள்ளும் நிகழ்வுகளையும் பாதுகாக்க பொலிஸ் நிலைய மட்டத்தில் ஒரு சிறப்பு பாதுகாப்புத் திட்டத்தை செயற்படுத்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

# மொரீசியஸில் புதிய நவீன புற்றுநோய் மருத்துவமனையில் முதல் அறுவை சிகிச்சையை செய்த சென்னை பேராசிரியர் பாலாஜி





மொரீசியஸ் நாட்டில் புதிதாகத் திறக்கப்பட்ட நவீன புற்றுநோய் மருத்துவமனையில் நடந்த முதல் அறுவை சிகிச்சையான நாக்கு புற்றுநோய் அறுவை சிகிச்சையை சென்னையைச் சேர்ந்த பாலாஜி பல் மற்றும் முகச்சீரமைப்பு மருத்துவமனையின் நிர்வாக இயக்குநரும் உலகப் புகழ்பெற்ற முகச்சீரமைப்பு அறுவை சிகிச்சை நிபுணருமான பேராசிரியர் டாக்டர் எஸ்.எம்.பாலாஜி செய்து முடித்தார்.

அந்த மருத்துவமனையை மொரீசியஸின் சுகாதாரத்துறை அமைச்சர் அனில்குமார் பட்சு பெப்ரவரி 4ஆம் திகதி திறந்துவைத்தார். அறுவை சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்துமுடித்த பேராசிரியர் பாலாஜியை மொரீசியஸ் பிரதமர் டாக்டர் நவீன் ராம்கூலம் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்தார்.

பிரதமருடனான சந்திப்பின்போது மொரீசியஸில் பல், வாய், முகம் மற்றும் கபால மறுசீரமைப்புத் திட்டங்களை மேம்படுத் தியதற்காக பேராசிரியர் பாலாஜி, அவருக்கு நன்றி தெரிவித்தார்.

மொரீசியஸின் விக்டோரியா மருத்துவ மனையின் முகச்சீரமைப்பு அறுவை சிகிச்சை நிபுணராக பேராசிரியர் பாலாஜியை பிரதமர் ராம்கூலம் நியமித்த பிறகு கடந்த 13 வருடங்களாக அவர் அந்த நாட்டில் சேவையாற்றிவருகிறார். பேராசிரியர் பாலாஜி வருடத்துக்கு இரண்டு மூன்று தடவைகள் மொரீசியஸுக்குச் சென்று ஒவ்வொரு தடவையும் 12 முதல் 15 முகச்சீரமைப்பு அறுவை சிகிச்சைகள் வரை செய்து அரசின் சுகாதாரத்துறை மூலம் மொரீசியஸ் நாட்டு மக்களுக்கு வெற்றிகரமாகச் சேவை செய்துவருகிறார்.

லண்டனில் மருத்துவப் படிப்பை முடித்தவரான பிரதமர் ராம்கூலம் தனது நாட்டில் நவீன முறையிலான சிகிச்சைகளை அளிப்பதில் நேரிடும் சிக்கல்களையும் சவால்களையும் புரிந்துகொள்ளக்கூடியவர்.

மொரீசியஸ் நாட்டு மக்களுக்காக பேராசிரியர் பாலாஜி வழங்கிவரும் முகச்சீரமைப்பு அறுவை சிகிச்சை சேவையை பிரதமர் பாராட்டினார். முகச்சீரமைப்பு பற்றி தான் எழுதிய ‘Clinical Craniomaxillofacial Surgery’ என்ற நூலை பேராசிரியர் பாலாஜி பிரதமர் ராம்கூலத்திடம் கையளித்ததாக பாலாஜி பல் மற்றும் முகச்சீரமைப்பு மருத்துவமனை நிர்வாகம் வெளியிட்ட செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## நீதிமன்ற துப்பாக்கிச்சூட்டின்...

சாரதியான சமிந்து தில்ஷான் பியுமாங்க கந்தனாராச்சியுடன் தொடர்பில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

இந்த வழக்கு மேலதிக விசாரணைக்காக கொழும்பு குற்றப்பிரிவிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளதாக மஹரகம பொலிஸாரின் மூத்த அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தினார்.

கொலைத் திட்டம் குறித்து காதலிக்குத் தெரியும் என்றும் கொலைக்குப் பிறகு தனது காதலனுடன் இந்தியாவுக்குத் தப்பிச் செல்ல அவர் தயாராக இருந்ததாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. சமிந்து தில்ஷான் கொலையைச் செய்துவிட்டு தப்பிச் செல்லும்போது, அவர் காதலியை அழைத்துக்கொண்டு புத்தளத்தில் படகில் ஏற்றிச் செல்லத் திட்டமிட்டிருந்தார்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவரும் அவரது காதலியும் நாட்டை விட்டு வெளியேறத் திட்டமிட்டு, அதற்காக நீர்கொழும்புக்குச் செல்லத் தயாராகி வந்தனர். அங்கிருந்து தப்பிச் செல்லும் இடத்துக்கு தனியாக பயணிக்கத் தயாராகியிருந்தனர். அந்தப் பெண்ணை நீர்கொழும்புக்கு அழைத்துச் செல்ல வந்த ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொலைத் திட்டம் குறித்து அவருக்கும் தெரிந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. மேலும் விசாரணைக்காக கொழும்பு குற்றப்பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இது தொடர்பாக மேலும் இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக, துப்பாக்கிச் சூடு நடத்தியவர் தப்பிச் சென்ற வாகனத்தின் ஓட்டுநர், துப்பாக்கிச் சூட்டுக்கு உதவிய பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டுள்ளனர். செவ்வந்தி என்ற பெண் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

தற்போது கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களின் விசாரணையில் இருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில், இந்தக் கொலையில் தொடர்புடைய மற்றவர்களைக் கண்டறியும் நடவடிக்கைகளையும் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த கொலைச்சம்பவத்துக்கு பயன்படுத்திய வேனின் சொந்தக்காரர் அத்துருகிரிய பொலிஸ் நிலையத்தின் கான்ஸ்டபிள் ஆவார். வாகனம் போலி இலக்கத்தகடுகளையும் போலி செசியையும் கொண்டிருந்தது ஆய்வுகளில் தெரியவந்துள்ளது. இவரின் பன்னிப்பிட்டிய வீட்டை சோதனையிட்டபோது அங்கிருந்து பெருமளவு ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

### துப்பாக்கிதாரியின் வட்ஸ்அப் குறுந்தகவல்கள் வெளியானது

இதேவேளை, புதுக்கடை நீதிமன்றத்தில் துப்பாக்கிச் சூடு மேற்கொண்டு பாதாள உலகக் கும்பல் தலைவர் கனேமுல்ல சஞ்சீவ கொலை செய்யப்படுவதற்கு முன்னர், துப்பாக்கிச் சூடு நடத்தியவர், வெளிநாட்டிலிருந்து கொலையைத் திட்டமிட்ட சலிந்த என்ற நபரை வட்ஸ்அப் மூலம் தொடர்பு கொண்டமை தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, “நீ வேலையைச் செய்” எனவும் எல்லாம் சாதகமாகவுள்ளது. பயப்படாதே சுடு! எனவும் சலிந்த கூறியுள்ள குறுந்தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அந்த குறுந்தகவல் விபரம் பின்வருமாறு,

துப்பாக்கிதாரி, “உள்ளே ஏதாவது பிரச்சினையா?”, “நான் உள்ளே இருக்கிறேன்” என்றார்.

இல்லை, வா, நீ தயாராகு?” முடித்து விடு “எல்லாம் சரியாக இருக்கிறது” என்றார் சலிந்த.

“அப்படியானால் பொலிஸார்?” என்று துப்பாக்கிதாரி கூறியபோது,

காலை 9.48 மணியளவில், “எல்லாம் நன்றாக இருக்கிறது” “நீ முடித்து விடு” என்று சலிந்த பதிலளித்துள்ளார்.

பின்னர், காலை 9.54 மணியளவில், துப்பாக்கிச் சூடு நடத்தியவர் சலிந்தவுக்கு தொலைபேசி அழைப்பினை விடுத்துள்ளார்.

பின்னர் “அவன் இறந்துவிட்டானா?” என்று கேட்டுள்ளார்.

“ஆமாம்” என்று சலிந்தவுக்கு துப்பாக்கிச் சூடு நடத்தியவர் பதிலளித்துள்ளார்.

“அருமை” என்று பதிலளித்த பிறகு, “நீ என் உயிர்” என்று சலிந்த பதிலளித்துள்ளார்.

“ஏன் இப்படி கூறுகின்றீர்கள், ‘‘நீங்கள் எனக்கு உணவளித்து, ஒரு தந்தையைப் போல என்னைக் கவனித்துக் கொண்டீர்கள். எனவே நீங்கள் என் சகோதரர்” என துப்பாக்கிதாரி கூறியுள்ளார்.

சகோதரி இன்னும் அங்கேயே தான் இருக்கிறாள். “நான் வந்துவிட்டேன்,” என்று துப்பாக்கிதாரி மேலும் தெரிவித்துள்ளார்.

### மூவர் தடுத்துவைப்பு

சஞ்சீவ கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் மூன்று சந்தேகநபர்கள் பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெக்குனுவல முன்னிலையில் நேற்றுமுன்தினம் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

சஞ்சீவவைக் கொன்ற துப்பாக்கிச் சூடு நடத்திய நபருக்கு துப்பாக்கியை வழங்கிய சந்தேக நபர் ஒருவரும் அதனை கொண்டுசென்ற இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களை தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தவுள்ளதாகவும் மன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை பரிசீலித்த மேலதிக நீதவான், சந்தேகநபர்களை விசாரணை செய்வதற்கு பொலிஸாருக்கு அனுமதியளித்ததுடன், விசாரணைகளின் முன்னேற்றத்தை நீதிமன்றில் அறிவிக்குமாறும் உத்தரவிட்டார்.

குறித்த மூவரும் அஸ்கிரிய, கம்பஹா மற்றும் உடுகம்பொல ஆகிய பகுதிகளில் கைதாகியுள்ளனர்.

19, 22, 25 வயதான மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச்சூட்டுக்கு ஒத்தாசை வழங்கிய குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

துப்பாக்கிச்சூட்டுக்கு பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியை தம்வசம் வைத்திருந்தமை முதல் குற்றம் இடம்பெறுவதற்கு முதல் நாளில் துப்பாக்கிதாரிக்கு துப்பாக்கியை வழங்கிய குற்றச்சாட்டில் ஹொரணேகாரகே தமிந்து லக்ஷான் என்பவரும் சம்பவத்தின் பின்னர் துப்பாக்கிதாரியையும் தப்பிச்சென்ற பெண்ணையும் முச்சக்கரவண்டியில் ஏற்றிச்சென்ற குற்றச்சாட்டில் தமித் அஞ்சன நயனஜித் மற்றும் சமோத் கிமிஹான ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த முச்சக்கரவண்டி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

அதற்கமைய கனேமுல்ல சஞ்சீவ கொலை தொடர்பில் இதுவரை 08 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் உள்ளடங்குகின்றார்.

கடந்த 19ஆம் திகதி காலை புதுக்கடை 5ஆம் இலக்க நீதிமன்றத்தினுள்ளே மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சஞ்சீவ சமரக்கோன் எனப்படும் கனேமுல்ல சஞ்சீவ கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தலதா மாளிகையில் வைக்கப்பட்டுள்ள புனித தந்தத்தை காட்சிப்படுத்த இணக்கம்

## அஸ்கிரிய - மல்வத்து விகாரைகளின் பீடாதிபதிகள் தெரிவிப்பு

(எம்.ஏ. அமீனுல்லா)

ஏப்ரல் மாதம் வரலாற்று புகழ் மிக்க தலதா மாளிகையில் வைக்கப்பட்டுள்ள புத்த பெருமானின் புனிதத் தந்தத்தை காட்சிப்படுத்த அஸ்கிரிய மற்றும் மல்வத்து விகாரைகளின் பீடாதிபதிகளும் மற்றும் ஸ்ரீ தலதா மாளிகையின் தியவதன நிலமே ஆகியோர் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, அவர்கள் சம்மதித்துள்ளனர்.

ஸ்ரீ தலதா மாளிகையில் புத்த பெருமானை நேற்று (23) காலை வழிபட்ட பின்னர் மல்வத்து விகாரையின் பீடாதிபதி வண. திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் மற்றும் அஸ்கிரிய விகாரையின் பீடாதிபதி வண. வரகாகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர்களை சந்தித்து ஆசிபெற்ற பின்னர் ஜனாதிபதி மேற்படி கோரிக்கையை முன்வைத்திருந்தார்.





கடந்த 2009ஆம் ஆண்டு, வரலாற்று புகழ்மிக்க தலதா மாளிகையில் வைக்கப்பட்டுள்ள புத்த பெருமானின் புனிதத் தந்தத்தை நேரில் தரிசிக்க இலட்சக்கணக்கான மக்கள் கண்டிக்கு வந்தனர்.

இந்த ஆண்டு ஏப்ரல் 18 முதல் 28 வரை பத்து நாட்களுக்கு காட்சியை நடத்துவது குறித்து கடந்த 16 வருடங்களுக்கு பின்னர் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன்போது மல்வத்து அஸ்கிரிய விகாரையின் பீடாதிபதிகள், மாநாயக்கர்கள் தியவதன நிலமே, மத்திய மாகாண ஆளுநர் சரத் அபேகோன், மாவட்டச் செயலாளர் இந்திக்க உடவத்த மற்றும் அமைச்சர் சமந்த வித்யாரத்ன, பிரதி அமைச்சர்களான ஹன்சக விஜேமுனி, பிரசன்ன குணசேன மற்றும் அரச உத்தியோகத்தர்கள் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.



தினக்குரல் பத்திரிகையின் ஸ்தாபகர் மறைந்த எஸ்.பி.சாமியின் பூதவுடலுக்கு அகில இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் சார்பில் அதன் தலைவரும் தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான செந்தில் வேலவர் அஞ்சலி செலுத்தினார்.

## தினசரி பலாபலன்கள்

### குரோதி வருடம் மாசி மாதம் 12ஆம் நாள் திங்கட்கிழமை

**மேஷம்**: தொழில் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளால் தொல்லைகள் தோன்றும். கடின உழைப்பால் உடல் நலம் பாதிக்கப்படலாம்.

**ரிஷபம்**: உடல் நோய்களால் சற்று சிரமப்படுவீர்கள். தனம், பொருள் இழப்புகளை இன்று சந்திக்க வேண்டி வரும். நிதானம் வேண்டும்.

**மிதுனம்**: சமூகத்திலும் தொழிலிடத்திலும் கவனமாக நடந்துகொள்ளுங்கள். உங்கள் துணைவியின் ஆலோசனைக்கு செவிசாயுங்கள்.

**கடகம்**: உங்கள் பகைவர்கள் விநயமான நடந்து கொள்வார்கள். கேட்ட இடத்திலிருந்து பணம் இன்று கிடைக்கும். கடனை அடைப்பீர்கள்.

**சிம்மம்**: நினைத்த காரியத்தில் வெற்றி வாகை சூடி சாதனைப் படைப்பீர்கள். குழந்தைகளில் தேவைகளுக்கான செலவுகள் இருக்கும்.

**கன்னி**: தொலைநோக்கு சிந்தையோடு இன்று வேலைகளை ஆரம்பிப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைத்திருக்கும்.

**துலாம்**: பண வருவாய்க்கு குறை இருக்காது. தைரியத்தை விடமாட்டீர்கள். முயற்சி வெற்றியைத் தரும்.

**விருச்சிகம்**: குடும்பத்துக்கான செலவுகளைச் செய்ய வேண்டிய கட்டாயம். ஆனாலும் நெருக்கடியிலும் சமாளித்துக் கொள்வீர்கள்.

**தனுசு**: சுப நிகழ்வுகளில், அல்லது குடும்ப விழாக்களில் கலந்து கொள்வீர்கள். பாராட்டுகள் கிடைக்கப்பெறுவீர்கள்.

**மகரம்**: ஆணவத்தால் புத்தி இழந்து விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். தேவையற்ற சிந்தனைகளால் மனதை கெடுத்துக் கொள்வீர்கள்.

**கும்பம்**: நினைத்த காரியத்தில் வெற்றியும் இலாபமும் உண்டு. ஆனாலும் தேவையற்ற பயணங்களால் செலவுகள் உண்டு.

**மீனம்**: தொழில் முயற்சிகளில் வெற்றி கிட்டும். உங்கள் நண்பர்கள் மூலம் நீங்கள் கேட்ட உதவிகள் கிடைக்கும்.

**திதி** : ஏகாதசி பி.ப.1.45 வரை பின் துவாதசி
**நட்சத்திரம்** : பூராடம் மு.இ.6.59 பின் உத்திராடம்
**பிறை** : தேய்பிறை
**யோகம்** : மரண யோகம் முழுவதும்
**வார சூலை** : கிழக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது
**நல்ல நேரம்** : காலை- 6.25 – 7.25 மணிவரை பகல் - 1.25 – 2.25 மணிவரை. மாலை-3.25 – 4.25 மணிவரை.
**ராகு காலம்** : 7.55 – 9.25 மணிவரை
**எமகண்டம்** : 10.55 – 12.25 மணிவரை
**குளிகை** : 1.55 – 3.25 மணிவரை
**சந்திராஷ்டமம்** : இடப-மிதுன ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும். (பின்னிரவு 12.56 வரை இடப ராசியினருக்கு)

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று முன்னிரவு 6.59 வரை**

அஸ்வினி, கார்த்திகை, ரோஹிணி, திருவாதிரை, பூசம், மகம், உத்திரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம், உத்திராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி

**இன்று முன்னிரவு 6.59 மேல்**

பரணி, ரோஹிணி, மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சித்திரை, விசாகம், கேட்டை, பூராடம், திருவோணம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும், தொழில், வியாபார இலாபங்கள்,கல்விச் சிறப்பு, திடீர் தன அதிஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும். அதிஷ்டம், சுகம் உண்டு.

**விசேட தினம்** : ஏகாதசி விரதம்



**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 32 இந்திய மீனவர்கள் கைது





மன்னாருக்கு வடக்கே உள்ள கடல் பகுதியில் நடத்தப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது, இலங்கை கடற்படையினர் 05 இந்திய மீன்பிடிப் படகுகளை பறிமுதல் செய்து, 32 இந்திய மீனவர்களை கைதுசெய்தனர்.

மன்னாருக்கு வடக்கே உள்ள கடல் பகுதியில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த 05 இந்திய மீன்பிடிப் படகுகளை கடற்படையினர் நேற்று (23) பறிமுதல் செய்தனர். மேலும் மீன்பிடியில் ஈடுபட்ட 32 இந்திய மீனவர்களும் கைதுசெய்யப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட இந்திய மீன்பிடிப் படகுகள் மற்றும் கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் சட்ட நடவடிக்கைக்காக மன்னார் மீன்வள ஆய்வாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

2025ஆம் ஆண்டு இதுவரை, இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடித்தமைக்காக 18 இந்திய மீன்பிடிப் படகுகளை கடற்படை பறிமுதல்செய்ததுடன், 131 இந்திய மீனவர்களையும் கைதுசெய்துள்ளது.




தமிழன் THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 பெப்ரவரி, 24ஆம் திகதி, திங்கட்கிழமை

# பாதாள உலகமும் அரசின் செயற்பாடும்!

பாதாள உலகக் குழுக்களின் நடவடிக்கைகளால் மோதல்கள், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், படுகொலைகள் தினசரி செய்திகளாகி விட்டன. பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவும் இது தொடர்பில் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு 75 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களும் 18 கத்திக்குத்து அல்லது வாள்வெட்டுச் சம்பவங்களும் பதிவாகியுள்ளன. இவ்வாண்டு இதுவரையான காலப்பகுதியில் 17 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களும் 05 கத்திக்குத்து அல்லது வாள்வெட்டுச் சம்பவங்களும் பதிவாகியுள்ளன. இந்தச் சம்பவங்களில் நேரடியாக அல்லது மறைமுகமாக பொலிஸ் மற்றும் முப்படையிலுள்ள சிலரின் ஒத்துழைப்புகள் கிடைத்துள்ளமையும் இனங்காணப்பட்டுள்ளது. அதற்கமைய இரு பொலிஸார், ஒரு இராணுவ அதிகாரி, இராணுவத்திலிருந்து விலகிய 07 பேர், ஒரு விமானப்படை அதிகாரி ஆகியோர் இவ்வாறான குற்றச்செயல்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியமை தொடர்பில் அடையாளங்காணப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டு செப்டெம்பர் தொடக்கம் இதுவரையில் 13 ரி -56 ரகத் துப்பாக்கிகள், 21 பிஸ்டல்கள், 15 ரிவோல்வர்கள், ஒரு ஏ.கே. 47 ரகத் துப்பாக்கி, 805 வீட்டில் தயாரிக்கப்பட்ட வெடிமருந்துகள், 75 போர 12 ரகத் துப்பாக்கிகள், 10 நாட்டுத் துப்பாக்கிகள் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்தோடு, 309 கிலோ கிராம் ஹெரோயின், 97 கிலோ கஞ்சா, 123 கிலோ கேரள கஞ்சா, 312 கிலோ கஞ்சா பொட்டலங்கள், 383 கிலோ ஐஸ் போதைப்பொருள், 6,430 லீற்றர் சட்டவிரோத மதுபானம் என்பனவும் பொலிஸாரின் சுற்றிவளைப்புகளில் கைப்பற்றப்பட்டுள்ளன. சர்வதேச பொலிஸாரின் ஒத்துழைப்புடன் வெளிநாடுகளில் தலைமறைவாகியிருந்த 19 சந்தேகநபர்கள் நாட்டுக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர். அதற்கமைய 199 சிவப்பு அறிவிப்புகள், 90 நீல அறிவிப்புகள், 04 மஞ்சள் அறிவிப்புகளும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

சிறைச்சாலைகளிலிருந்து இயக்கப்படும் குற்றச்செயல்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புகளில் 239 தொலைபேசிகள், 145 சிம் அட்டைகள், 1,430 கிராம் ஐஸ் போதைப்பொருள், 05 கிராம் ஹெரோயின் 400 போதை மாத்திரைகள் என்பவை கைப்பற்றப்பட்டுள்ளன.

இப்படியாக பாதாள உலகக் கோஷ்டியை பின்னணியாகக் கொண்ட செயற்பாடுகள் கண்டறியப்பட்டுள்ளன. ஆனால், பாதாள உலகக் குழுக்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியாத பாதுகாப்புத் தரப்பு அதற்கு வேறு வியாக்கியானம் கூறி மக்களைத் திசைதிருப்ப முயல்வதாகத் தோன்றுகிறது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பிலான விசாரணைகளை திசைதிருப்பும் நோக்கில் பல்வேறு முயற்சிகள் பாதாள உலகக் குழுக்கள் மூலம் முன்னெடுக்கப்படுவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் டி.டபிள்யூ.ஆர்.பி.செனவிரத்ன பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டுள்ளார். இது இந்த நேரத்துக்கு உரித்தான கருத்தல்ல.

திட்டமிட்டுக் குற்றங்களைப் புரியும் பாதாள உலகக் குழுக்களுக்கிடையில் பல்வேறு முரண்பாடுகள் ஏற்பட்டு அவை சூட்டுச் சம்பவங்களாக வெடித்துள்ளன என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை.

இந்த முரண்பாடுகளுக்குப் பல காரணங்கள், காரியங்கள் உள்ளன. சில சமயங்களில் அவற்றுக்கு அரசியல் தொடர்புகளும் இருக்கலாம். ஆனால், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளைத் திசை திருப்பும் நோக்கத்திலேயே பாதாள உலகக் குழுக்கள் இவ்வாறு தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியிருக்கின்றன என்ற பாணியில் கருத்துக்கூற முற்படுவது முரண்பாடுமிக்கது. மேற்கண்ட ஆயுதங்கள், வெடிபொருட்கள் மீட்கப்பட்ட பின்னரும்கூட பாதாள உலகத்தின் செயற்பாடுகளை மடைமாற்றுவது தகுந்ததல்ல.

அது மாத்திரமல்ல, பாதாள உலகக் குழுக்களின் மோதல்கள், தாக்குதல்கள் தீவிரமடைந்திருப்பதை உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விசாரணைகளுடன் தொடர்புபடுத்தி அதனைத் திசை திருப்பும் செயற்பாடென அரச தரப்பு காட்ட முற்படுவது மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடும் விவகாரமும் கூட.

முன்னைய அரசில் சரியோ, பிழையோ பதில் பொலிஸ் மா அதிபராக இருந்த தேசபந்து தென்னக்கோன் பாதாள உலகக் குழுவினருக்கெதிராக யுத்தமொன்றைப் பிரகடனப்படுத்தி தீவிர தொடர் நடவடிக்கைகளை எடுத்து அவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார் என்பதும் புதிய அரசு வந்த பின்னர் திட்டமிட்ட குற்றங்களை இழைக்கும் பாதாள உலகக் குழுவினரின் நடவடிக்கைகள் தீவிரமடைந்திருக்கின்றன என்பதும் மறுக்க முடியாத உண்மைகளாகும்.

அவற்றை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக தவறான திசை திருப்பல்களுக்கு மக்களையும் நாட்டையும் இந்த ஆட்சியாளர்கள் கொண்டுசெல்ல முயல்வது அபத்தமாகும். பாதுகாப்புத் தரப்பினரும் குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளதால் அவை தொடர்பில் ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டுள்ளதால் இப்படியான கருத்துகள் எதிர்வினைகளை உண்டுபண்ணக்கூடும்.

## இன்றைய நாளில்...

* 1809 – லண்டன் ரோயல் நாடக அரங்கு தீக்கிரையானது.
* 1863 – ஐக்கிய அமெரிக்காவின் பிராந்தியமாக அரிசோனா அமைக்கப்பட்டது.
* 1945 – எகிப்தியப் பிரதமர் அகமது மாகிர் பாசா பாராளுமன்றத்தில் வைத்துக் கொல்லப்பட்டார்.
* 1969 – மரைனர்-6 விண்கலம் செவ்வாய்க் கிரகத்துக்கு ஏவப்பட்டது.
* 2008 – 32 ஆண்டுகளாக கியூபாவின் அரச தலைவராக இருந்த பிடல் காஸ்ட்ரோ அப்பதவியிலிருந்து இளைப்பாறினார். இவர் கூபாவின் பொதுவுடைமைக் கட்சியின் தலைவராக அடுத்த மூன்று ஆண்டுகளுக்குப் பதவியிலிருந்தார்.
* 2009 – வட்ஸ்அப் கலிபோர்னியாவில் தொடங்கப்பட்டது.

# மலையயக மக்களின் துயரம் தீருமா?

**யூ.எல்.ஏ. மஜீட்**

இலங்கையில் இருநூறு வருட கால வரலாற்றைக் கொண்டு விளங்கும் மலையக மக்களின் துன்பங்களும் துயரங்களும் தொடர்கதையாக நீண்ட வண்ணமே உள்ளன. இந்நாட்டை யார் ஆட்சி செய்தாலும் ஆட்சியாளர்களால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் அனைத்து வாக்குறுதிகளும் வெறும் கண்துடைப்பாகவே காணப்படுகின்றன.

1948ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15ஆம் திகதி நடைமுறைப்படுத்தப்பட்ட குடியுரிமைச்சட்டம் 1862ஆம் ஆண்டு பிரித்தானியரால் பெருந்தோட்டத் தொழிலுக்காக தென்னிந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட பல இலட்சக்கணக்கான தமிழ் மக்களுடைய குடியுரிமையையும் வாக்குரிமையையும் இழக்க வழி வகுத்தது. இவர்கள் 1947 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வாக்களித்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனால், சிங்கள ஆட்சியாளர்களால் நிறைவேற்றப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டமானது தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை பாராளுமன்றத்தில் குறைக்கும் நோக்குடன் திட்டமிடப்பட்டு செய்யப்பட்ட சதியாகும்.

இலங்கை சுதந்திரமடைந்து இதுகால வரை மலையகம் மட்டுமல்ல, சிறுபான்மையினமாகக் கருதப்படும் முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் எந்த நன்மையும் ஏற்பட்டதாகக் கூற முடியாது. ஏனெனில், இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டதன் பின்னர் முதலாவதாக ஏற்படுத்தப்பட்ட பிரஜாவுரிமைச்சட்டமே தமிழ், முஸ்லிம், மலையக மக்களுக்கு பாரிய பாதிப்பாக அமைந்தது. சுதந்திரத்துக்குப் பின்னர் இந்த நாட்டில் ஒரு குழந்தை பிறந்து அதற்குப் பிறப்புச் சான்றிதழ் பெறுவதானால் குழந்தையின் தந்தை இந்த நாட்டில் பிறந்திருக்க வேண்டும். அவர் இந்நாட்டுப் பிரஜையென்று உறுதிப்படுத்துவதென்றால் அவரது தந்தை இந்த நாட்டில் பிறந்திருக்க வேண்டுமென்று ஏற்படுத்தப்பட்ட இந்தச் சட்டமே சிறுபான்மை இனத்தின் மீது விதிக்கப்பட்ட ஒரு சங்கடமாகும்.

மேற்படி இந்தச் சட்டத்தின் காரணமாக மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் இந்திய வம்சாவளியினர்களே. அத்தோடு, இச்சட்டத்தின் காரணமாக 35,000க்கும் மேற்பட்ட இந்திய வம்சாவளிகளாகக் காணப்பட்ட முஸ்லிம்களும் பாதிக்கப்பட்டனர். ஆனாலும், அன்று இந்தச் சட்டம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டபோது முஸ்லிம் பிரதிநிதிகள் அதனை ஆதரித்தனர். இந்த நிலையில்தான் 1939இல் இலங்கை – இந்திய காங்கிரஸ் தோற்றம் பெற்றது. திடீரென அரசாங்கம் இந்திய வம்சாவளித் தொழிலாளர் தலைவர்களை வேலையிலிருந்து நீக்கியது.

இதனைக் கேள்விப்பட்ட மகாத்மாகாந்தி இலங்கையின் ஆட்சியாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஜவஹர்லால் நேருவை அனுப்பியிருந்தார். நேரு பேச்சுவார்த்தை நடத்தியும் கூட ஆட்சியாளர்கள் வேலைநீக்கத்தை வாபஸ் வாங்க மறுத்தனர்.

இதனால் நேரு இந்திய வம்சாவளியினருக்கென தனியான அமைப்பை உருவாக்குமாறு ஆலோசனை வழங்கினார். நேருவின் ஆலோசனையின் பேரில் இலங்கை - இந்திய காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. எஸ்.தொண்டமான் 1944 இல் இலங்கை – இந்திய காங்கிரஸின் தலைவரானார். 1950 களில் இந்த அமைப்பு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டது.

இலட்சக்கணக்கானோரின் வாக்குரிமையைப் பறித்த சட்டம் முன்னைய காலத்தில் இலங்கை, வெளிநாடுகளின் ஆக்கிரமிப்புக்குட்பட்டிருந்தது. 1505இல் போர்த்துக்கேயரின் ஆட்சியின் கீழ் வந்த இலங்கை, பின் ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரின் அதிகாரத்தின் கீழ் வந்தது.

எனினும், முழு நாடுமே 1851ஆம் ஆண்டிலேயே ஆங்கிலேயர் வசமானது. 1815 கண்டி ஒப்பந்தத்தின் கீழ் முழு நாட்டின் நிர்வாகத்தையும் ஆங்கிலேயர் கைப்பற்றிக் கொண்டனர். இதன் பின்னர் இங்கிலாந்து மகாராணியின் கீழுள்ள நாடாக இலங்கை கருதப்பட்டதுடன் இங்கு வாழ்ந்த மக்களும் இங்கிலாந்து ஆதிக்கத்தின் குடிகளாகக் கருதப்பட்டனர்.




நாட்டின் முழு அதிகாரத்தையும் தமக்குக் கீழ் கொண்டுவந்த ஆங்கிலேயர், நிலபுலன்களைத் தமதாக்கிக் கொண்டனர். இவற்றில் தமக்கு இலாபம் தரக்கூடிய பயிர்களை நட்டார்கள். பெருந்தோட்டங்களை உருவாக்கினார்கள். அவர்களது பெருந்தோட்டங்களில் வேலை செய்வது அடிமைத்தனம் எனக் கருதியதால் இலங்கையர்கள் அங்கு தொழிலாளர்களாக வேலை செய்யப் பின்வாங்கினர். இதனால் இந்தியாவிலிருந்து தொழிலாளர்களை வரவழைக்கத் தீர்மானித்தனர். தென்னிந்தியாவிலிருந்து இங்கு தொழிலாளர்களைக் கொண்டுவருவது இலகுவாக இருந்ததால் அங்கிருந்து தமிழர்கள் கொண்டுவரப்பட்டு தோட்டப் பகுதிகளில் பதிவாக்கப்பட்டனர். இக்காலத்தில் இது பிரச்சினையாக இல்லாவிட்டாலும் ஆங்கிலேயர் வெளியேறிய பின் அது எமது நாட்டுக்கு பிரச்சினையாகிவிட்டது.




ஏனெனில், சுதந்திரம் கிடைத்தபோது இலங்கையிலே இந்தியாவிலிருந்து குடிபெயர்ந்தோர் தொகை 7,81,000 ஆக இருந்தது. இது நாட்டின் அக்காலத்து சனத்தொகைப்படி 11.7 வீதமாகும். ஆங்கிலேயர் காலத்தில் அனைவரும் அவர்களது ஆளுமையின் கீழுள்ள பிரஜைகளாகக் கணிக்கப்பட்டதால் பிரச்சினை எழவில்லை. எனினும், டொனமூர் யாப்பின்படி சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்ட பின் பிரச்சினை எழுந்தது. இதன்படி இந்திய வம்சாவளியினரும் வாக்குரிமையைப் பெற்றதால் அரசியலில் முக்கியத்துவம் பெறத் தொடங்கினர்.

இது பெரும்பான்மை சமூகத்துக்கும் அவர்களது அரசியற் கட்சிகளுக்கும் பிரச்சினையாகிவிட்டது. மேற்குறித்த வாக்குகளாவன பல தொகுதிகளில் தீர்மானிக்கும் வாக்குகளாக இருந்தன. இக்காலத்தில் 2,25,000 இந்திய வம்சாவளி வாக்காளர்கள் இருந்தனர். நாட்டிலே 50 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்ட காலத்தில் இவர்கள் 07 உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் சக்தியைப் பெற்றிருந்தனர். அதுமட்டுமல்ல, தொழிலாளர் என்ற வகையில் இடதுசாரிக் கட்சியை இவர்கள் ஆதரித்ததால் இடதுசாரிக் கட்சிகளும் வெற்றிபெற்றன. இலங்கை – இந்திய சங்கம் என்ற அரசியல் இயக்கமும் இருந்தது. சோல்பரி யாப்பின் பின் நடந்த தேர்தலில் ஹப்புத்தளைத் தொகுதியைத் தவிர, ஏனைய தொகுதிகளிலும் இந்திய வம்சாவளிப் பிரதிநிதிகளே வெற்றிபெற்றனர்.

இவ்வாறு இடதுசாரிக் கட்சிகளும் இந்திய வம்சாவளியினரும் முன்னேறி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி அஞ்சியது. எனவே, இதனைத் தடுக்க நினைத்த ஆட்சியாளர்கள் 1948ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க பிரஜாவுரிமைச்சட்டத்தைக் கொண்டுவந்தனர். இதன்மூலம் பிரஜாவுரிமை மட்டுப்படுத்தப்பட்டது. இதன்மூலம் இந்திய வம்சாவளியினர் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிக்க வேண்டிய நிலை வந்தது. இந்தப் பிரஜாவுரிமை இல்லாமல் போனது. விண்ணப்பங்களைப் பரிசீலிக்கும் அதிகாரம் நீதியதிகாரிகளாகக் கருதப்பட்ட பிரதி ஆணையாளர்களுக்கு வழங்கப்பட்டது. இறுதி முடிவு இந்த ஆணையாளர்களது முடிவாகும். எனவே, மிகச் சிறிய காரணங்களாலும் பிரஜாவுரிமை மறுக்கப்பட்டது.

அதுமட்டுமல்ல, மக்கள் அக்கறையின்மை காரணமாக விண்ணப்பிக்காதுமிருந்தனர். எனவே, அவர்கள் குறிப்பிட்ட காலப்பகுதியளவே விண்ணப்பித்ததாகத் தகவல்கள் கூறுகின்றன. இதனால் இலங்கையில் அப்போதைய சனத்தொகையில் 10 வீதம் பிரஜாவுரிமை இருந்தது. இதை அடிப்படையாகக் கொண்டு கருத்து முரண்பாடு கொண்ட தமிழ்ச்சங்கம் இரண்டாகப் பிரிந்தது. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையில் பெடரல் கட்சி உருவாகியது. அமைச்சராகவிருந்த சுந்தரலிங்கம் அமைச்சரவையிலிருந்து விலகினார். இது பெரும் விமர்சனத்துக்குள்ளானது. இவ்வாறான செயல் ஆபிரிக்க கறுப்பினத்தவருக்கு எதிரான செயல்போன்றதென விமர்சிக்கப்பட்டது. இடதுசாரியான என்.எம்.பெரேரா இதை இனவாத செயலாகக் கருதினார். கொல்வின் ஆர்.டி. சில்வா சர்வஜன வாக்குரிமையின் புதைகுழியைத் தோண்டுவதற்கான மண்வெட்டியெனவும் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் இதன் பிரதிபலிப்பு பயங்கரமானதாக இருக்குமெனவும் கூறினர்.

அவர்களின் இச்சட்டத்தை தடுக்க செல்வநாயகம் நீதிமன்றத்தை நாடியபோது பலனளிக்கவில்லை. இந்தியத் தலைவர்கள் எதிர்த்தும் பலனில்லாமல் போய்விட்டது. இதனால் இலங்கை - இந்திய உறவிலும் விரிசல் வந்தது. இந்தச் சட்டத்தின் பிரதிபலிப்பாக இந்திய வம்சாவளி உறுப்பினர்கள் குறைந்தது மட்டுமல்ல, இடதுசாரிகளின் பிரதிநிதித்துவமும் குறைந்தது. இது ஐக்கிய தேசியக் கட்சிக்கு நன்மையாகிவிட்டது. எனினும், பிற்காலத்தில் இச்சட்டத்தில் மாற்றம் வந்தது.

சிறிமா - சாஸ்திரி காலத்தில் ஒப்பந்தம் மூலம் தீர்வுகள் காணப்பட்டன. இந்த ஒப்பந்தத்தின்படி ஒரு தொகை இந்திய வம்சாவளியினரை இந்தியா குறிப்பிட்ட காலத்தில் திருப்பி அழைத்துக் கொள்ளவும் மீதிப்பேருக்கு பிரஜாவுரிமை வழங்கவும் இரு நாடுகளும் உடன்பட்டன.

பிற்காலத்தில் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து அனைத்து இந்திய வம்சாவளியினருக்கும் வாக்குரிமை வழங்கியதோடு அதற்காக மலையக மக்களின் தொண்டனாக, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவராக, நியமன எம்.பியாக, பாராளுமன்ற உறுப்பினராக, அமைச்சராக, மலையக மக்களின் முடிசூடா மன்னனாக 1950 முதல் 1999 வரை மலையக மக்களின் விடியலுக்காகத் தன்னை அர்ப்பணித்த மாமனிதனாக அம்மக்களால் போற்றப்பட்டிருந்தார். மலையகம் என்று கூறும்போது நினைவுக்கு வருவது எஸ்.தொண்டமானின் நாமந்தான் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை.

தொண்டமான் 1960 களில் நியமன எம்.பியாக விளங்கியதோடு 1977 இல் நடைபெற்ற இலங்கையின் எட்டாவது பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் நுவரெலியா – மஸ்கெலியா தொகுதியில் இ.தொ.கா. சார்பாகப் போட்டியிட்டு 20,783 வாக்குகளைப் பெற்று அத்தொகுதியின் மூன்றாவது தேசிய அரச பேரவை உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டதுடன், ஐ.தே.க. அமைச்சரவையில் கிராமிய கால்நடை அபிவிருத்தி அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார். அதன் பயனாக மிகவும் மோசமான நிலையில் காணப்பட்ட மலையகத்துக்கு பல முன்னோடித்திட்டங்களைக் கொண்டுவந்ததுடன் மலையக மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காகத் தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தார்.

அத்துடன், 1988 இல் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மலையக மக்களுக்கு வாக்குரிமையைப் பெற்றுக்கொடுத்தார். தொடர்ந்தும் பிரேமதாச அமைச்சரவையிலும் 1994 முதல் 1999 வரை சந்திரிகாவின் அமைச்சரவையிலும் கிராமிய கால்நடை அபிவிருத்தி அமைச்சராக விளங்கிய தொண்டமான், மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்குத் தேவையான அனைத்தையும் பெற்றுக்கொடுத்தார்.

1977இல் மலையகத்திலிருந்து பாராளுமன்றத்துக்கு தொண்டமான் மட்டுமே தெரிவுசெய்யப்பட்ட நிலையில், 1988இல் ஐ.தே.கட்சி அரசால் வழங்கப்பட்ட வாக்குரிமையின் காரணமாக 1989 க்குப் பின்னர் நடைபெற்ற உள்ளூராட்சி, மாகாண சபைத் தேர்தல் உட்பட பொதுத் தேர்தல்களில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராகவும் உள்ளூராட்சி, மாகாண சபை உறுப்பினராகவும் அமைச்சராகவும் பிரதியமைச்சராகவும் பதவி வகித்தார். ஆனால், மேற்படி மலையக மக்களின் வாக்குரிமையை ஐ.தே.க. அரசே இல்லாமலாக்கியது. அதே ஐ.தே.கட்சியே மீண்டும் வாக்குரிமையை வழங்கியது.

அந்த வகையில், மலையக மக்களின் அனைத்து தேவைகளையும் வாழ்வாதாரத்தையும் வழங்கி அம்மக்கள் தலைநிமிர்ந்து வாழக்கூடிய நிலை உருவாகியது. ஆனால், 1994 இன் பின் ஆட்சியிலிருந்த ஆட்சியாளர்கள் அம்மக்களின் விடயத்தில் போதிய கவனஞ்செலுத்தாது அவர்களது சம்பளம் உட்பட அவர்களது குடியிருப்பு போன்ற விடயங்களில் பொய் வாக்குறுதிகளை காலத்துக்குக் காலம் வழங்கி அவர்களை நம்பவைத்து ஏமாற்றும் அரசியலே தொடர்கதையாகக் காணப்படுகின்றது. அத்துடன், லிந்துல, சாமிமலை, நல்லதண்ணி, டயகம, கந்தப்பொல, மீப்பிட்டிமான, கட்டுமான, நானுஓயா, அம்பேவெல மற்றும் பட்டிப்பொல போன்ற இடங்களில் வாழும் தொழிலாளர்கள் இன்னும் பழைய லயன் காம்பராக்களிலேயே எந்தவித அடிப்படை வசதிகளுமின்றி வாழ்கின்றனர்.

இதுபற்றி அவர்களிடம் வினவியபோது, ''இந்நாட்டில் யார் ஆட்சியில் அமர்ந்தாலும் எங்களின் துயரம் தீரப்போவதில்லை'' - எனக் கவலை தெரிவித்தனர். ஆகவே, தற்பொழுது ஆட்சியிலிருக்கும் தேசிய மக்கள் சக்திக்கு மலையக மக்கள் முன்னர் எப்போதும் இல்லாதவாறு வாக்களித்து நுவரெலியா, பதுளை, மாத்தளை, இரத்தினபுரி போன்ற மாவட்டங்களிலிருந்து பல உறுப்பினர்களை தெரிவு செய்துள்ள நிலையில், இந்த ஆட்சியிலாவது விமோசனம் கிடைக்குமா என அம்மக்கள் பெரும் எதிர்பார்ப்புடன் உள்ளனர். ஆகவே, இந்த அரசாங்கம் முக்கியமாகவும் உடனடியாகவும் செய்யவேண்டிய தேவைகளாவன:-

- தற்பொழுது காணப்படும் பொருளாதாரப் பிரச்சினை காரணமாகத் தங்களின் வாழ்வாதாரத்தை நடத்த முடியாமல் கஷ்டப்படும் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்சம் நாளொன்றுக்கு 2,000 ரூபா வழங்கப்படல் வேண்டும்.
- குறைந்த பட்சம் மாதத்தில் 25 நாட்களுக்கு வேலை வழங்கவேண்டும்.
- கஷ்டப்படும் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு மானிய அடிப்படையில் பொருட்கள் வழங்கப்பட வேண்டும்.
- ஏனைய மக்கள் பெறும் நலன்புரி உட்பட அரசால் வழங்கப்படும் அனைத்து நிவாரணங்களும் அம்மக்களுக்கும் வழங்கப்படல் வேண்டும்.
- அவர்கள் நாளாந்தம் எதிர்நோக்கும் குளவிக்கொட்டு, விஷ ஜந்துகளினால் ஏற்படும் அச்சம், சிறுத்தைகளின் அச்சுறுத்தல் போன்றவற்றிலிருந்து அவர்களைப் பாதுகாக்க உரிய நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும்.
- மலையக மக்கள் தமக்கென இன அடையாளம் இல்லாதவர்களாக கடந்த 200 வருடங்களாக இந்திய வம்சாவளிகள், மலையகத் தொழிலாளர்கள், இலங்கையர் என்று தேசிய ரீதியில் அடையாளம் காணப்படுவதை விடுத்து 'மலையகத் தமிழர்' என இன ரீதியாக அடையாளப்படுத்த வேண்டுமென்பதோடு மேற்கூறப்படும் அம்மக்களின் உடனடித் தேவைகளை எந்தத் தாமதமுமின்றி ஆட்சியாளர்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் நிறைவேற்ற வேண்டுமென்பதை விநயமாக வேண்டுகின்றோம்.

## நக்கல் நமசிவாயம்

அடிக்கிற வெயிலுக்கு முட்டையை அவிக்க மினக்கெடத் தேவையில்லை பாருங்கோ.. கூரையில வைத்தாலே அவிஞ்சு போகும்...



# 379 சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கு இவ்வருட வரவு - செலவுத்திட்டத்தில் 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

## அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ்





இலங்கை முழுவதிலும் 379 சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் இயங்குவதாகவும் இவற்றில் 47 நிலையங்கள் அரசாங்கத்துக்குரியதென்றும் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்தார். ஏனைய அனைத்து சிறுவர் பராமரிப்பு நிலையங்களும் அரசுசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையின் அனுசரணையுடன் பராமரிக்கப்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நாடு முழுவதிலுமுள்ள சிறுவர் பராமரிப்பு நிலையங்களின் திறன்களை மேம்படுத்தவும் அவற்றின் பௌதீக வள, மனிதவள மேம்பாட்டுக்கும் இந்த வருட வரவு - செலவுத்திட்டத்தில் 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாக மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டம் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தலைமையில் கூடியபோதே இந்தத் தகவல்கள் முன்வைக்கப்பட்டன.

சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கு உள்நாட்டு, வெளிநாட்டு உதவிகள், திணைக்களத்தினூடாக பல்வேறு வழிகளிலிருந்து கிடைக்கும் நிதியுதவிகளைக் கருத்திற்கொள்ளும்போது ஒரு சிறுவனுக்கு ஏறத்தாழ 30,000 ரூபா ஒதுக்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இருந்தபோதும், இந்த நிதி அந்தச் சிறுவர்களுக்கு உரிய முறையில் சென்றடைகின்றதா என்பதைக் கணக்காய்வு செய்வதற்கு முறையான கட்டமைப்பெதுவுமில்லையென்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

நன்னடத்தை அதிகாரிகளின் சுற்றிவளைப்பு களில் சில சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் இதுவரை மூடப்பட்டிருப்பதாகவும் அந்தச் சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் சிறுவர்கள் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உள்ளாவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர். சிறுவர் பராமரிப்பு நிலையங்களை ஒழுங்குபடுத்துவதற்கான நடைமுறையொன்று தயாரிக்கப்படுமென அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் பதிலளித்தார்.

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு பணமீட்டும் அமைச்சல்லவென்றும் மாறாக, கிராமப்புற மற்றும் பொருளாதார அடிப்படையில் சமூக நலனை மேம்படுத்துவதற்கு முதன்மையாகப் பங்களிக்கும் அமைச்சென்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். எனவே, மக்களுக்கு நன்மை செய்வதே முக்கிய பொறுப்பாக இருக்க வேண்டுமென்றும் அதற்காக ஒதுக்கப்படும் அனைத்து நிதி மற்றும் ஏனைய ஒதுக்கீடுகளை சமூக நலனுக்காக சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

தேசிய அடையாள அட்டை தயாரிப்பதில் உள்ள சிக்கல் நிறைந்த சூழ்நிலையால் பௌத்த பிக்குனிகள் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாகவும் இந்தப் பிரச்சினைகளை விரைவாகத் தீர்ப்பதற்கான வழிமுறையை வகுப்பது குறித்தும் குழுவில் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், சூப்பர் மார்க்கெட்டுகளுக்கு அருகில் யாசகம் மற்றும் பல்வேறு வியாபார நடவடிக்கைகளில் பாடசாலைச் சிறுவர்களை ஈடுபடுத்துவது குறித்தும் அமைச்சுசார் ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் அதிகாரிகளிடம் கேள்வியெழுப்பினர். இதனைத் தடுப்பதற்குத் தற்பொழுது காணப்படும் சட்டம் போதுமானதாக இருந்தாலும், அவற்றைச் செயற்படுத்துவதில் நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுவதாக குழுவில் ஆஜராகியிருந்த தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இக்கூட்டத்தில் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரதியமைச்சர் (வைத்தியர்) நாமல் சுதர்ஷன, நீதி மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் (சட்டத்தரணி) ஹர்ஷன நாணயக்கார, புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் (கலாநிதி) ஹினிதும சுனில் செனவி, கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர்கள், மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு, அதனுடன் இணைந்த நிறுவனங்களின் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# சவூதி அரேபியாவின் ஸ்தாபகர் தின நிகழ்வு; அரசியல் பிரமுகர்கள் பலரும் பங்கேற்பு







சவூதி அரசின் ஆரம்ப வரலாற்றையும் பண்பாட்டு பெருமையையும் முன்னிறுத்திக் கொண்டாடப்படும் சவூதி அரேபிய ஸ்தாபக தின நிகழ்வும் இலங்கை-சவூதி அரேபிய இரு நாடுகளுக்கிடையிலான இராஜதந்திர நட்புறவு ஆரம்பமாகி 50 வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டு விருந்துபசார நிகழ்வும் நேற்று முன்தினம் (22) மாலை கொழும்பில் மிக விமரிசையாக இடம்பெற்றன.

இவ்வரலாற்றுச் சிறப்புமிக்க கொண்டாட்ட நிகழ்வில் பிரதம அதிதியாக வெளிவிவகார பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா கலந்துகொண்டதுடன், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வானது சவூதி அரேபியாவின் வரலாற்றுப் பாரம்பரியம் மற்றும் கலாசாரத்தை நினைவுகூருவதுடன், இலங்கைக்கும் சவூதி அரேபியாவுக்குமிடையிலான இராஜதந்திர மற்றும் கலாசார உறவுகளை மேலும் வலுப்படுத்துவதாக அமைந்துள்ளது.

அத்துடன், போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் சிவில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி, பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, ரிஷாத் பதியுதீன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

# பிரதமரின் செயலாளரை சந்தித்த உலக வங்கியின் ஆசிய பிரதிநிதிகள்



உலக வங்கியின் தெற்காசிய பிராந்தியத்தின் சுபீட்சத்துக்கான பிராந்தியப் பணிப்பாளர் மேத்யூ வர்கிஸ், பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரியை பிரதமர் அலுவலகத்தில் சந்தித்தார்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார தொலைநோக்கு, தற்போது நடைமுறைப்படுத்தப்படும் சீர்திருத்தங்கள் மற்றும் உலக வங்கிக்கும் இலங்கை அரசுக்குமிடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

கலந்துரையாடலின்போது உலக வங்கியின் பிரதிநிதிகள் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயல்முறையின் முன்னேற்றம் குறித்து நன்றி தெரிவித்ததுடன், பொருளாதார ஸ்திரத்தன்மைக்கான சாதகமான நடவடிக்கையாக அரசாங்கத்தின் 2025 வரவு - செலவுத் திட்ட உரையைப் பாராட்டினர்.

பயனுறுதிவாய்ந்த கொள்கை அமுலாக்கத்தின் முக்கியத்துவத்தை தூதுக்குழுவினர் வலியுறுத்தியதுடன், தடைகளின்றி சர்வதேச முகவர் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பை உறுதிசெய்வதில் பிரதமர் அலுவலகத்தின் முக்கிய பங்கையும் சுட்டிக்காட்டினர்.

பிரதமரின் செயலாளர் சபுதந்திரி, அரசாங்கத்தின் முன்னுரிமைகள் பற்றி விளக்கியதுடன், 2025 வரவு - செலவுத் திட்டம் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை, நல்லாட்சி மற்றும் பேண்தகு அபிவிருத்தியை மையமாகக் கொண்டதாகக் குறிப்பிட்டார். முதலீட்டை ஊக்குவித்தல், வர்த்தகத்துறைக்கான வசதிகளை வழங்குதல் மற்றும் டிஜிட்டல் மயப்படுத்தல் ஆகியவற்றில் அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு குறித்தும் அவர் விளக்கினார்.


ஊழலுக்கெதிரான உறுதியான நிலைப் பாட்டுடன் பாதிக்கப்படக்கூடிய சமூகக் குழுக்கள் எதிர்கொள்ளும் சமூக-பொருளாதார சவால்களை எதிர்கொள்வது முதன்மையான முன்னுரிமையாக உள்ளதென்றும் அவர் வலியுறுத்தினார். சுகாதாரம், கல்வி மற்றும் சுற்றுலாத் துறைகளின் அபிவிருத்திக்கு விசேட முக்கியத்துவமளித்து சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் (SMEs) மற்றும் விவசாயத் துறைக்கான விநியோகங்களை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் செயலாளர் வலியுறுத்தினார்.

கொள்கைத் திட்டமிடலில் பேண்தகுதன்மை மற்றும் சமூகப் பாதுகாப்பை முன்னிறுத்தி இந்த அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்குத் தேவையான சட்டச்சீர்திருத்தங்கள் குறித்தும் கவனஞ்செலுத்தப்பட்டு வருவதாக பிரதமரின் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

பிரதமரின் மேலதிக செயலாளர் சாகரிகா போகஹவத்த, வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் டி.ஏ.டி.டி. பிரேமரத்ன மற்றும் உலக வங்கியின் ஆசிய பிராந்தியப் பிரதிநிதிகள் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# சூழலை சுத்தப்படுத்துவதுபோல் எமது ஆட்சியில் ஊழல்வாதிகள் சுத்தம்செய்யப்படுவார்கள்

## அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவிப்பு





கிளிநொச்சி பூநகரி கௌதாரிமுனை கடற்கரையை சுத்தம் செய்யும் வேலைத்திட்டம் நேற்று (23) 'அழகான கடற்கரையின் பங்குதாரர்களாவோம்' எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்டது. தூய்மையான இலங்கை எனும் வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாகவே இதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்றன.

கிளிநொச்சி மாவட்ட செயலாளர் சு.முரளிதரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு கடற்றொழில், நீரியல் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், கிளிநொச்சி மாவட்டச் செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், பூநகரி பிரதேச செயலாளர், பிரதேச சபைச் செயலாளர், இராணுவத்தினர், பொலிஸார், கடற்படையினர், மாணவர்கள், ஊர்மக்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர். பிரதேச அமைப்புகளும் ஆதரவு வழங்கியிருந்தன.

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் வெற்றியளிப்பதற்கு முழு அர்ப்பணிப்புடன் செயற்படும் அரச அதிகாரிகளுக்கு பாராட்டுத் தெரிவித்த அமைச்சர் இவ்விடத்தில் தனியார் பங்களிப்புமிருந்தால் அது மேலும் சிறப்பாக அமையுமெனவும் தெரிவித்தார்.

அதைப்போல இந்த கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தினூடாக வடக்கு, கிழக்கு, தெற்கு மலையகம் ஆகிய அனைத்து பகுதிகளிலும் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

நாடு முழுமையாக சுத்தம் செய்யப்பட வேண்டுமென்றால் குப்பைகளை அப்புறப்படுத்தல் மாத்திரமல்ல, இனவாதம், மதவாதம், ஊழல், மோசடிகளுக்கும் முடிவுகட்ட வேண்டும்.

எனவே, நாங்கள் சூழலைச் சுத்தப்படுத்துவது போல் எமது ஆட்சியின் கீழ் ஊழல்வாதிகள், மோசடியாளர்கள், கடத்தல்காரர்கள், கொலைகாரர்கள் ஆகியோர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு நீதி தேவதை மூலம் சுத்தம் செய்யப்படுவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

# தையிட்டி விகாரை தொடர்பான ஜனாதிபதியின் பதில் அவரின் இயலாமையை வெளிப்படுத்தியுள்ளது

## சபா குகதாஸ் சாடல்

*(பு.கஜிந்தன்)*

சட்டவிரோதமாக தையிட்டியில் அமைக்கப்பட்ட விகாரை தொடர்பில் பாராளுமன்றத்தில் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி அநுரவை நோக்கி கேள்வி கேட்டபோது அவர் வழங்கிய பதில் ஜனாதிபதியின் இயலாமையை வெளிப்படுத்தியுள்ளதென வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணியில் உரிமையாளர்களின் அனுமதி இல்லாமல் தனிநபர் சட்டத்தை மீறி சட்டத்துக்கு முரணாக அமைக்கப்பட்ட விகாரை தொடர்பில் நீதி வழங்குமாறு ஜனநாயக வழியில் போராடும் மக்களையும் அதற்கு ஆதரவு வழங்கும் மக்கள் பிரதிநிதிகளையும் பார்த்து மதவாதத்தையும் இனவாதத்தையும் தூண்ட முயற்சிக்கின்றனர் என அப்பட்டமான பொய்யுரைக்கும் ஜனாதிபதி கடந்தகால ஆட்சியாளர்கள் போன்றே தமிழர் தாயகப் பகுதியில் அரச சட்டவிரோத செயற்பாடுகளை மறைக்க முயற்சிக்கின்றார். இதன் மூலம் இதுவரை அரச இயந்திரம் மேற் கொண்ட - மேற்கொள்ளும் மத ஆக்கிரமிப்பு மற்றும் இனவாத ஆக்கிரமிப்பு போன்றவற்றை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஜனாதிபதி ஆதரிக்கின்றாரா?

அநுர அரசாங்கம் தமிழர் தாயகத்தை இரண்டாக பிரித்து கிழக்கு மாகாணத்துக்கும் தமிழர்களுக்கும் தொடர்புகள் இல்லை என்ற உள் நோக்கில் மறைத்து வடக்கு மாகாணம் என்ற உரையாடலை முதன்மைப்படுத்துகின்றனர்.

ஜனாதிபதி சட்டவிரோத நடவடிக்கைக்கு நாட்டின் சட்டங்களுக்கு அமைவாக என்ன செய்வேன் என சொல்வதற்கு முதுகெலும்பற்று வடக்கு மக்களின் கருத்துகளின் அடிப்படையில் தீர்வு வழங்குவோம் என்பது வேடிக்கையாக உள்ளது. ஆகவே வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சட்டத்தின் ஆட்சியை அரச இயந்திரத்தின் மூலம் வழங்கும் இயலுமையை ஜனாதிபதி வழங்க தயார் இல்லை என குறிப்பிட்டுள்ளார்.

# விசாரணை என்ற பெயரில் யாழ். ஊடகர்கள் மீது அடக்குமுறை

## அகில இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கண்டனம்

தையிட்டி விகாரையை இடிக்க வாரீர் என சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட போலிச் செய்தி தொடர்பில் யாழ்ப்பாண ஊடகவியலாளர்களான பிரதீபன், பரதன் ஆகியோரிடம் பலாலிப் பொலிஸார் 06 மணித்தியாலங்களுக்கு மேல் விசாரணைகளை மேற்கொண்டுள்ளமை தொடர்பில் அகில இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கடும் அதிருப்தியையும் கண்டனத்தையும் தெரிவிக்கிறது.

இது குறித்து அகில இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

விசாரணைகளுக்கப்பால் மேற்படி ஊடகர்களின் தொலைபேசியை பரிசோதித்தமை, அவர்களின் பிரத்தியேக செயற்பாடுகளைத் துருவித்துருவி விசாரித்தமை தமிழ் ஊடகவியலாளர்களை அச்சுறுத்தி அடிபணிந்து வைத்திருக்கச் செய்யும் மற்றுமொரு வேலையாகவே இருப்பதாக அகில இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கருதுகிறது.

வடக்கில் பணியாற்றும் ஊடகவியலாளர்கள் அந்தப்பகுதி பிரச்சினைகளைத் தைரியமாகப் பகிரங்கப்படுத்தி வரும் சூழ்நிலையில், சம்பந்தமேயில்லாத பிரச்சினைகளில் அவர்களை சம்பந்தப்படுத்துவது ஏற்புடையதல்ல. மேற்படி ஊடகவியலாளர்கள் இருவர் மீதான அடக்குமுறை தொடர்பில் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவின் கவனத்துக்கு கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ள ஒன்றியம், இந்த இருவருக்கும் எதிர்காலத்தில் அச்சுறுத்தல்கள் ஏதாவது ஏற்படுமாயின் அரசாங்கமே அதற்கான பொறுப்பை ஏற்கவேண்டுமென வலியுறுத்திக் கூறிவைக்க விரும்புகிறது.

# மட்டுவில் வடக்கு சந்திரபுரம் பகுதியில் சடலமாக மீட்கப்பட்ட வயோதிபத் தம்பதி

*(சாவகச்சேரி நிருபர்)*

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் வடக்கு சந்திரபுரம் பகுதியில் நேற்று (23) காலை வயோதிபத் தம்பதி மர்மமான முறையில் சடலங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேற்படி 82 வயதான கணவனும் 73வயதான மனைவியும் வீட்டில் தனிமையில் இருந்த நிலையில், காலையில் வீட்டுக்கு மகன் சென்றுள்ளார். இருவரும் சடலமாக இருப்பதைப் பார்வையிட்ட அவர் இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுகயீனம் மற்றும் இறப்பின் அதிர்ச்சி காரணமாக இருவரும் உயிரிழந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

# கள்ளு தயாரிக்க உரிமம் வழங்கியமைக்கு எதிராக கம்பளையில் ஆர்ப்பாட்டம்

*(கலஹா செய்தியாளர்)*

கம்பளை, தொலுவ பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள மில்லகஹமுல கிராம சேவைப் பிரிவைச் சேர்ந்த ஒருவருக்கு கலால் திணைக்கள அதிகாரிகள் கள்ளு தயாரிக்க உரிமம் வழங்கியமைக்கெதிராக பொதுமக்கள், பௌத்த துறவிகள், ஆசிரியர்கள் மற்றும் குழந்தைகளுடன் அப்பகுதி மக்கள் நேற்று (23) பகல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் கருத்துத் தெரிவிக்கையில், கலால் திணைக்கள அதிகாரிகள் 72 வயதுடைய நபருக்கு மேற்படி கள்ளு தயாரிக்கும் உரிமத்தை வழங்குவதன் மூலம் பொதுமக்களைத் தவறாக வழிநடத்தியதாகக் கூறினர்.

மேற்படி கள்ளு தயாரிக்கும் உரிமம் 2024ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட நபரின் மகனுக்கு வழங்கப்பட்டிருந்தது. பொது மக்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்ததையடுத்து, இம்முறை வயதான தந்தைக்கு அதை வழங்கி மோசடி செய்துள்ளதாகவும் கிராமத்தில் மதுபானக் கடைகளை அனுமதிப்பதன் மூலம் அரசாங்கம் கிராமத்தை அழிப்பதோடு, பாடசாலை மாணவர்களும் குழந்தைகளும் காலையில் குடிபோதையில் இருப்பவர்களால் துன்புறுத்தப்படுவதாகவும் இரவில் வீடுகளில் நடக்கும் சண்டைகள் மக்களின் வாழ்க்கையை சீர்குலைத்துவிட்டதாகவும் கூறிய அவர்கள், சம்பந்தப்பட்ட தரப்பினர் உடனடியாக கள்ளு தயாரிக்கும் உரிமைத்தை இரத்துச்செய்ய வேண்டுமெனவும் ஆர்ப்பாடத்தில் கலந்து கொண்டோர் கோரிக்கை விடுத்தனர்.

மேற்படி கள்ளுக்கடைப் பிரச்சினையால் தனக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறி, கம்பளை பொலிஸ் நிலையத்தில் எழுத்துபூர்வ புகார் அளித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பாதீட்டுக்கு பின்னர் தமிழரின் இன்றைய நிலை...




இடதுசாரிகளாகத் தம்மைக் காட்டிக்கொண்ட தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தனது முதலாவது வரவு - செலவுத்திட்டத்தை வெற்றிகரமாகச் சமர்ப்பித்திருக்கிறது. கடந்த இரண்டு தேர்தல்களிலும் ஊழலுக்கு எதிராக ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டுமென்று முதலில் ஜனாதிபதி அநுரவுக்கும் பின்னர் தேசிய மக்கள் சக்திக்கும் வாக்களித்தவர்களில் நானும் ஒருவன். ஆனால், இதுவரை நிகழ்ந்த மாற்றங்களை எடுத்துக் கவனமாக ஆராய்ந்தால் சிறுபான்மையினர் அதிலும் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்கள் இன்னும் எச்சரிக்கையாக இருக்கவேண்டியது மிகவும் அவசியமென்பது தெளிவாகப் புலனாகிறது.


வரவு - செலவுத் திட்டத்தை மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் வடக்கின் அபிவிருத்திக்கு பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தோன்றும். அதேவேளை, கடந்த காலத்தில் பேரினவாத அரசாங்கங்கள் செய்த இராணுவமயமாக்கல் திட்டங்களுக்கு இம்முறையும் எந்த விதத்திலும் சளைக்காமல் வழமைபோல் அரச ஊழியரின் சம்பளத்துக்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையில் 48% மானது பாதுகாப்புப் படையினரின் சம்பளத்துக்கே ஒதுக்கப்பட்டுள்ளது.

உலகில் பொது மக்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது அதிகளவு இராணுவ மற்றும் பாதுகாப்புப் படையினரைக் கொண்ட நாடாக இலங்கை தொடர்ந்தும் இருந்து வருகிறது (ஆதாரம் இணைக்கப்பட்டுள்ளது). ஏற்கனவே தையிட்டி முதலான தமிழரிடமிருந்து ஆக்கிரமிக்கப்பட்ட இடங்கள் எதையும் விடுவிக்கமாட்டோமென்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கைவிரித்துவிட்டது (ஆதாரம் இணைக்கப்பட்டுள்ளது). நேர்மையான அதிகாரியென்று பெயர் பெற்ற ஆளுநர், பிறந்து வளர்ந்த இடங்களைக் கைவிட்டு மாற்று நிலங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று மனச்சாட்சியை அடைவு வைத்துவிட்டு ஆலோசனை வழங்குகிறார்.

இதேவேளை, பிரதமர் ஹரிணியும் தேசிய மக்கள் சக்தியின் ஏனைய அரசியல்வாதிகளும் வழமையான அரசியல்வாதிகள்போல் படம் காட்டும் வேலையில் ஈடுபட்டுள்ளனர். வடமாகாணத்தில் பல பாடசாலைகளுக்கு அடிப்படை வசதிகளில் ஒன்றான மலசலகூட வசதிகள் கூட சரியான முறையில் காணப்படவில்லை. இதன் காரணமாகப் பல சந்தர்ப்பங்களில் மாணவர்கள் பாடசாலைகளில் மலசலகூடங்களை உபயோகிக்காது தமது இயற்கைத் தேவைகளைக் கட்டுப்படுத்துவதால் சிறுநீர் தொற்றுக்குள்ளாகின்றனர். மறுபுறம், பல பாடசாலைகளில் ஆய்வுகூட வசதிகள் மிகவும் கேவலமான நிலையில் உள்ளன. குறிப்பாக, தென்பகுதியில் தொழில்நுட்பப் பிரிவுகள் உள்ள பாடசாலைகளில் உள்ள ஆய்வுகூடங்களுடன் ஒப்பிட்டால் வடபகுதிப் பாடசாலைகளின் நிலை எவ்வளவு பின்தங்கியுள்ளதென்ற உண்மை புலப்படும். உண்மை இவ்வாறிருக்க, புலம்பெயர் தமிழர்களின் பெரும் நிதி யுதவியுடன், நிறைவான வளங்களுடன் இயங்கும் முன்னணிப் பாடசாலையான யாழ். இந்துக் கல்லூரிக்குத் தேசிய மக்கள் சக்தியின் அரசியல் குழுவுடன் சென்று படம் காட்டும் கல்வியமைச்சர் உண்மையாக எந்தக் குறைகளை நிவர்த்திசெய்திருப்பார்?

அடுத்ததாக யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்று சிறுவர்களுடனும் நோயாளிகளுடனும் உரையாடி அவர்களது குறைகளை அறிவதாகப் படம் காட்டுகிறார். நூற்றுக்கணக்கான இருதய நோயாளிகள் மாரடைப்பால் ஏற்படும் உயிரிழப்பு அபாயத்தை எதிர்நோக்கி வடமாகாணத்தில் காத்திருக்கின்றனர். பல சத்திரசிகிச்சைக் கூடங்கள் யாழ். வைத்தியசாலையில் காணப்பட்டபோதிலும், மாபியா கும்பல் பைபாஸ் அறுவை சிகிச்சை செய்ய ஒரு நோயாளி ஆகக் குறைந்தது 2 1/2 வருடங்கள் காத்திருக்க வேண்டுமெனக் கூறுகிறது. இதன் காரணமாக உயிராபத்தை எதிர்நோக்கியுள்ள நோயாளிகள் தனியார் துறையில் மாபியாக்களுக்கு ரூ. 20 இலட்சம் அளவில் செலவழித்து பைபாஸ் அறுவை சிகிச்சை செய்து கொள்கிறார்கள். 20 இலட்சம் சேர்க்கமுடியாத பல ஏழைகள் இந்த 2 1/2 வருட காலத்தில் மாரடைப்பால் நாள் தோறும் இறந்து கொண்டிருக்கிறார்கள். உயிர்காக்கும் அடிப்படை நுண்ணுயிர் கொல்லி [antibiotics] மருந்துகள் அரச வைத்தியசாலைகளில் இல்லாத நிலை. புற்றுநோயாளர்களுக்கான மருந்துகளில் அநேகமானவை அரச வைத்தியசாலைகளில் இல்லை. வெளிச்சந்தையில் அவற்றின் விலை கோடீஸ்வரர்களாலும் செலுத்த முடியாத அளவு அதிகம். இதனால் பல்லாயிரக்கணக்கான ஏழை நோயாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இந்த ஏழைகளுக்கு விரைவாகச் சிகிச்சை செய்யப் பிரதமர் உதவி செய்திருந்தால் அவர்கள் கை கூப்பி அம்மையாரைத் தொழுதிருப்பார்கள். ஆனால், இதுவொன்றும் தெரியாத மாதிரி சிறு பிள்ளைகளுடனும் உயிர் ஆபத்தற்ற ஏனைய நோயாளிகளுடனும் உரையாடி அம்மையார் எதைச் சாதிக்க நினைக்கிறார்?

வட்டுவாகல் பாலத்துக்கும் ஏனைய சாலை அபிவிருத்திப் பணிகளுக்கும் நிதி ஒதுக்கியமைக்குத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நன்றி தெரிவித்துப் பேசும்போது ஏனைய தமிழ் உறுப்பினர்கள் கரகோஷம் செய்கிறார்கள். நெடுஞ்சாலை அபிவிருத்தி என்பது குடியேற்றத் திட்டத்தின் ஓர் உபாயம் என்ற சூழ்ச்சியை அறிய முடியாதவர்களாக இருக்கிறார்கள் தமிழர் பிரதிநிதிகள். அபிவிருத்தி என்ற போர்வையில் யாழ். நூலகம் புனர்நிர்மாணிக்கப்பட்டு கடந்தகால வரலாறு பூசிமெழுகப்பட்டு விட்டது. காரணம், நூலகத்தின் ஒரு பகுதியையாவது புதுப்பிக்காமல் வரலாற்று ஆவணமாகப் பாதுகாக்கும் எண்ணம் எவருக்கும் இருக்கவில்லை. இதுதான் வட்டுவாகல் பாலத்துக்கும் நிகழப்போகிறது.




மேலும், கடந்த கால நெடுஞ்சாலை அபிவிருத்தியின் பின்னர் மறவன்புலவு முதல் வவுனியா வரை தமிழர்களின் பூர்வீக நிலங்கள் மாற்றினத்தவர்களுக்கு கைமாறிக்கொண்டிருக்கிறது. ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தானுக்குக் காணி விற்க மாட்டோம் என்று பிரதேசவாதம் பேசிய வன்னி மண்ணின் மைந்தர்களும் கிழக்கில் சிவனேசதுரை சந்திரகாந்தன் மற்றும் விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகிய குற்றவாளிகளை ஆதரித்த கிழக்கு மைந்தர்களும் மாற்றினத்தவர்களுக்கு எந்தவித நாணமும் இல்லாமல் காணிகளை விற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் மிகவும் திட்டமிட்ட வகையில் வரையப்பட்ட வழிவரைபடத்தை [Road map] மகாவலி அபிவிருத்தி என்ற போர்வையில் சகல அரசுகளும் முன்னெடுத்து வந்துள்ளன. இரண்டு அவத்தைகளைக் கொண்ட இத்திட்டத்தின் முதல் அவத்தையானது [phase 1] வடக்கு, கிழக்கு மரபுவழித் தமிழர் தாயகக் கோட்பாட்டின் அடிப்படையான நிலத்தொடர்பை மதுறு ஓயா, யான் ஓயா மற்றும் மல்வத்த ஓயா ஆகிய ஆற்றுப்படுக்கைகளில் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்களை ஏற்படுத்தித் துண்டாடுதல் ஆகும். இதன் விளைவாக வடமாகாணம், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகியன தமது மரபு வழி நிலத்தொடர்பை இழக்கும். இரண்டாவது அவத்தையில் [phase 2] குறிப்பிட்ட சிங்களக் குடியேற்றங்களால் மாற்றமடையும் இனப்பரம்பலைப் பயன்படுத்தி மாகாண எல்லைகளை மீள் நிர்ணயம் செய்தலாகும். மகாவலி அமைச்சின் மேலதிக பொது முகாமையாளராக 80களில் கடமையாற்றியவரும் இந்த இரகசிய வழிவரைபடத்தை முதன் முதலாக ஜே.ஆர். ஜயவர்த்தன மற்றும் காமினி திசாநாயக்க ஆகியோரின் ஆசியுடன் நடைமுறைப்படுத்தியவருமான மாலிங்க ஹேமன் குணரத்னவின் நூலான 'ஒரு இறையாண்மை அரசுக்கு' [for a sovereign state]என்ற நூலில் இந்தத் திட்டம் குறித்து விரிவாக விளக்கியுள்ளார்.

இதே வழிவரைபடத்துக்கமைவாகப் புதிய அரசாங்கத்தின் ஆட்சியின் கீழ் மாறாது தொடரும் குடித்தொகை மாற்றங்கள் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையையும் மாநில சுயாட்சிக் கோரிக்கையையும் கொஞ்சம் கொஞ்சமாக வலுவிழக்கச் செய்து வருகின்றன. குறிப்பாக, இடதுசாரிகளாகத் தம்மைக் காட்டிக்கொள்ளும் இந்த அரசானது முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது மிகக்குறைவான தொகையான 43 பில்லியன் ரூபாவையே சமூக நலனோன்புக்காக [social welfare] செலவிட உத்தேசித்துள்ள அதேவேளை, பாதுகாப்புத் துறைக்காக வழக்கம்போலவே 442 பில்லியன் ரூபாவைச் செலவிட உத்தேசித்துள்ளது.

இந்த உண்மையைக் கூட உணர முடியாமல் தமக்குள் சண்டையிட்டுக் கொள்ளும் தமிழ் தேசியவாதிகள் ஒருபுறம். ஏற்கனவே அரசியல் யாப்பு மாற்றத்தைக் கிடப்பில் போட்டுள்ள தேசிய மக்கள் அரசாங்கம் பௌத்த மதத்துக்குரிய முன்னுரிமையையும் பேணிவரும் நிலையிலும் இன்னமும் அவர்கள் மூலமாக தமிழர்கள் சம உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியுமென்று மனப்பால் குடிக்கும் தமிழ் இளைஞர்கள் ஒருபுறம். புலிகள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் வந்து மீண்டும் தமிழர்களின் உரிமையைப் பெற்றுத் தருவார்கள் என்று இன்னமும் நம்பும் கனவுலகவாசிகள் சிலர். இவர்களது மாயையைப் பயன்படுத்திப் பாராளுமன்றச் சிறப்புரிமைக் கவசத்தினுள் ஒழிந்திருந்து இனத்தின் மானத்தைக் கப்பலேற்றும் கோமாளிகள் இன்னொருபுறம்.

எனவே, இதுவரை இருந்த அரசுகளைக் காட்டிலும் ஆபத்தான வகையில் தமிழ் மக்களுடன் இறங்கிப் பழகும் தந்திரோபாயத்தைக் கையிலெடுத்துப் பேரினவாத வழிவரைபடத்தை இற்றைப்படுத்த முற்படும் இந்த அரசு குறித்துத் தமிழர்கள் அனைவரும் விழிப்படைய வேண்டிய கடைசித் தருணம் இது.

இல்லையேல் மாகாண சபைகளையும் பிரதேச சபைகளையும் ஆளுநரப்பிடம் இழந்து, கட்டியுள்ள கோவணத்தையும் பறிகொடுத்த சுடலையாண்டிகளாக ஈழத் தமிழர்கள் தவிக்கும் காலம் வெகுதொலைவில் இல்லை.

◙ Dr. முரளி வல்லிபுரநாதன்

# முயற்சியுடையோருக்கு முன்னுதாரணம் லக்ஷ்மி



வெறுங்கை என்பது மூடத்தனம்... விரல்கள் பத்தும் மூலதனம்..." என்ற கவிஞர் தாராபாரதியின் வரிகளைக் கருத்திற்கொண்டு சுயதொழில் செய்து வருகிறார் வவுனியா லக்ஷ்மி. இயற்கையான முறையில் குளியல் சோப், ஷாம்பூ ஆகியவற்றைத் தயாரிக்கும் இவர் அவற்றை இணையத்தில் விளம்பரப்படுத்தி தனது தொழிலை பலப்படுத்தி வருகிறார்.

கணவன், குடும்பம், சமூகம் இப்படி பல்வேறு கடமைகளையும் தாண்டி சாதித்துக் காட்டிய பாரதி கண்ட புதுமைப் பெண் கணேசமூர்த்தி லக்ஷ்மி.

நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்... என்றார் முண்டாசுக் கவிஞர் பாரதி. அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு? என்ற எண்ணம்... உலகம் முழுவதும் பரவிக் கிடந்தது. பெண் விடுதலைக்காக உலகம் முழுவதும் பல்வேறு போராட்டங்கள் நடந்துள்ளன. இன்றளவும் நடந்து கொண்டிருக்கின்றன.

இதற்கு மத்தியில் பெண்கள் பல்வேறு சாதனைகளைப் படைத்துக்கொண்டிருக்கின்றனர்.

வவுனியா மாவட்டத்திலுள்ள தோணிக்கல் கிராமத்தைச் சேர்ந்தவர் கணேசமூர்த்தி லக்ஷ்மி. அவருடைய கணவர் யுத்தத்தினால் காணாமலாக்கப்பட்டவர். இவர் பெண் தலைமைத்துவக் குடும்பத்தைச் சேர்ந்தவர். மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

இவர் தனது முன்னோர்களிடம் கற்றறிந்த அனுபவம் மூலமாகவும் பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட செயலகம் மூலமாக சிறப்பு பயிற்சி பெற்றதன் மூலமாகவும் சோப்பு, ஷாம்பூ, தலைக்கு வைக்கும் எண்ணெய் உள்ளிட்டவைகளைத் தயாரித்து வருகிறார். ஆரம்பத்தில் தனது சொந்தத் தேவைக்காக மட்டுமே பொருட்களைத் தயாரித்து உபயோகப்படுத்தி வந்த இவரின் பணி, தற்போது LUXMY PRODUCTS என்ற பெயரில் வியாபாரமாக மாறி நிற்கிறது.

பொதுவாக வியாபாரம் நடைபெற, உயர்வடைய விளம்பரம் முக்கியமானதாக அமையும். ஆனால், இங்கு, தரமும் கவர்ச்சியும் நுகர்வோரை ஈர்க்கும் விதமும் இருக்கிறது. இதனால் பெரும்பான்மையான வாடிக்கையாளர் நேரடியாகச் சந்தித்து தங்களுக்குத் தேவையான பொருட்களைப் பெற்றுக்கொள்கின்றனர். தற்போது இவர் தயாரித்த பொருட்களை ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் வாங்கி வருகின்றனர்.

இயற்கை மற்றும் உடலுக்கு கேடுவிளைவிக்காத பொருட்களை தற்போது மக்கள் விரும்பத் தொடங்கிவிட்டனர். அன்றாடம் உபயோகிக்கும் சோப், ஷாம்பூ, வீட்டைத் துடைக்கப் பயன்படுத்தும் க்ளீனிங் திரவம், கொசுவிரட்டி என பலவற்றில் தீங்கு விளைவிக்கும் வேதியியல் பொருட்கள் சேர்க்காதவற்றையே பலரும் விரும்புகிறார்கள்.

கடைகளில் தயாரிக்கப்படும் குளியல் சோப்புகள் அதிக நாட்கள் விற்பனைக்கு இருக்க வேண்டும். என்பதற்காகவும் மக்களை கவர நறுமணம் வேண்டும், அழுக்குகளை நீக்கி பளிச்செனக் காட்ட வேண்டும் என்பதற்காகவும் செயற்கையான முறையில் ஏராளமான வேதிப்பொருட்களைச் சேர்க்கிறார்கள். எனவே, இயற்கையான முறையில் குளியல் சோப் தயாரித்து ஆரோக்கியமாகவும் அப்பொருட்களை விற்பனை செய்து நிரந்தர வருமானத்தையும் பார்க்க முடியும் என்கிறார் லக்ஷ்மி. தனது திறமையை வெளிக்காட்ட ஏதாவதொன்றில் சாதிக்க வேண்டுமென்றெண்ணி முதலில் பொழுதுபோக்காகத் தொடங்கியது, நாளடைவில் இதனுடைய முக்கியத்துவமறிந்து இதனையே தன்னுடைய அடையாளமாக மாற்ற முயற்சித்துள்ளார்.

இதுபற்றி அவர் கூறுகையில்,

“இன்று LUXMY PRODUCTS நிறுவனமாக ஒரு தொழில் முனைவர் என்ற அடையாளத்தையும் உருவாக்கியுள்ளேன். 10க்கும் மேற்பட்ட வகையான சோப்புகள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்து வருகின்றேன். இதில் எவ்வித வேதிப்பொருட்களும் பயன்படுத்தப்படுவதில்லை. குடும்பம், வேலை இரண்டையும் சமாளித்துக் கொள்வது சற்றுச் சவாலாக இருந்தாலும், பிடித்தவற்றைச் செய்யும் பொழுது அதற்கான நேரத்தை நம்மால் சரியான முறையில் நேர மேலாண்மையை பயன்படுத்திக்கொள்ள முடியும்.

வயல்வெளிகள், வீட்டுத்தோட்டம், காடுகளில் கிடைக்கக்கூடிய முடக்கத்தான் இலை, நாயுருவி இலை, குப்பை மேனி, செம்பருத்தி, மருதாணி, வேப்பிலை, கற்றாழை, நெல்லிக்காய், பப்பாளி, தேங்காய், சந்தனம், தேங்காய்ப் பால், நலுங்கு மாவு, கஸ்தூரி மஞ்சள், நுணா உள்ளிட்ட இயற்கைப் பொருட்களை மூலப்பொருட்களாகக் கொண்டு எல்லாப் பொருட்களையும் தயார் செய்கிறோம். இயற்கையாகக் கிடைக்கும் தூதுவளை, கற்றாழை, ஆவாரம் பூ, கேரட், பீட்ரூட், சங்குமப்பூ, ரோஜா இதழ்கள் போன்றவற்றை நம்மை சுற்றிக் கிடைக்கும் அனைத்து பொருட்களையும் பயன்படுத்தியே குறைந்த பொருட்களின் மூலம் அழகை மேம்படுத்திக் கொள்ளவும் சருமத்தை பாதுகாத்துக் கொள்ளும் வகையிலும் என்னுடைய தயாரிப்புகளை செய்து வருகிறேன். இயற்கைப் பொருட்களைப் பயன்படுத்தி தயாரிக்கத் தொடங்கினேன். வெண்ணெய், நெய் போன்றவற்றை மட்டுமே அதிகமாகப் பயன்படுத்துகிறோம்'' என்றார்.

**10க்கும் மேற்பட்ட சோப் வகைகளையும் தயார் செய்கிறார்.**

அவரது தயாரிப்பு தோல் வியாதிகள், சருமக் கோளாறுகள், வியர்வை நாற்றம், முகத்தில் முதிர்வுத் தன்மை உள்ளிட்ட பிரச்சினைகளைப் போக்க சோப் வகைகளும் அதேபோல, இளநரை, முடி



உதிர்வதைத் தடுப்பதற்கும் நன்றாக வளர்வதற்கும் ஷாம்பூ வகைகளையும் உற்பத்தி செய்கிறோம் என்கிறார்.

வெளி சந்தையில் விற்பனையாகும் பொருட்களின் விலையோடு ஒப்பிடுகையில், சரியான அளவு கிடைக்கிறது. மேலும் பொருட்களின் விலைக்கேற்ப அதன் தரமும் இருப்பதால் மகிழ்ச்சி.

பொழுதுபோக்குக்காக இணையத்தை பயன்படுத்தி, பொன்னான நேரத்தை வீணடிப்பவர்களுக்கு மத்தியில் இயற்கையின் நன்மைகளை கற்றறிந்து அதன் மூலம் பொருட்களை தயாரித்து சந்தைப்படுத்தி வெற்றியடைந்து வரும் இப்பெண்மணி பாராட்டுக்குரியவரே!!





◙ சிவகுமார் திவியா






















லிபர்ட்டி பப்ளிசர்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவத்தின் ஏற்பாட்டில் நிறுவன ஊழியர்களுக்கு ஆளுமை விருத்திக்கான பயிற்சிப் பட்டறையொன்று நேற்று முன்தினம் (22) வாதுவை கிராண்ட் பீச் ஹோட்டலில் இடம்பெற்றது. இதன்போது பங்குபற்றியோரை படங்களில் காணலாம்.

**படப்பிடிப்பு:** *கிரிஷான் காரியவசம், இஷான் சஞ்சீவ*

# காங்கேசன்துறையை வந்தடைந்த சிவகங்கை கப்பல்!




*பு.கஜிந்தன்*

நாகை துறைமுகத்திலிருந்து 83, பயணிகளுடன் இலங்கை காங்கேசன் துறைக்கு நேற்று முன்தினம், சிவகங்கை கப்பல் புறப்பட்டு, மதியம் 12.15 மணியளவில் காங்கேசன்துறையை வந்தடைந்தது.

இந்தியா - இலங்கை இடையிலான இரு நாட்டு கலாசாரம் மற்றும் சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக 2003ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நாகையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு புதிய பன்னாட்டு பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவை தொடங்கப் பட்டது.

இது சுற்றுலாப் பயணிகள் மற்றும் வர்த்தகர்கள் இடையே பெரும் வரவேற் பைப் பெற்ற நிலையில், புயல், மழை, கடல் சீற்றம், சீதோஷ்ண நிலை உள்ளிட்ட காரணங்களால் சென்ற ஆண்டு நவம்பர் மாதம் தற்காலிகமாக கப்பல் சேவையானது நிறுத்தி வைக்கப்பட்டது.

இந்நிலையில் சிவகங்கை கப்பல் போக்குவரத்துக்கு தயாரான நிலையில், இந்தியா, இலங்கை இடையிலான கப்பல் சேவை மீண்டும் துவங்கும் என கப்பலை இயக்கும் நிறுவனம் அறிவித்தது.

03 மாதங்களுக்குப் பின் நாகையில் இருந்து காங்கேசன்துறைக்கு கப்பல் சேவை மீண்டும் துவங்கியதால், இந்திய - இலங்கை இருநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் வர்த்தகர்கள் மகிழ்ச் சியடைந்துள்ளனர்.

இந்த கப்பலானது நேற்று முன்தினம் பி.ப. 1.30 மணிக்கு மீண்டும் காங்கேசன் துறையில் இருந்து நாகபட்டினம் நோக்கி 89 பயணிகளுடன் பயணத்தை ஆரம்பித் துள்ளது. அத்துடன் இந்தக் கப்பல் சேவையானது செவ்வாய் தவிர்ந்த ஏனைய அனைத்து நாட்களிலும் இடம்பெறும் என கப்பல் நிறுவனம் அறிவித்துள்ளது.

# பியகமவில் பொலிஸாரின் விசேட சுற்றிவளைப்பில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 09 பேர் உட்பட 44 பேர் கைது

*ஹனபி எம் தாஸீம்*

பியகம பொலிஸ் எல்லைப் பகுதி யில் மேற்கொள்ளப்பட்ட சிறப்புத் தேடுதல் நடவடிக்கையில், திறந்த பிடியா ணையுடன் கூடிய 09 பேர் உட்பட 44 சந்தேக நபர்களை பியகம பொலிஸார் கைதுசெய்துள்ளனர். திறந்த பிடியாணையுடன் 09 பேரும் சந்தேகத் தின் பேரில் 18 பேரும் போதைப்பொருள் மற்றும் ஆயுதங்களை வைத்திருந்த 04 பேரும் தாக்குதல்கள் தொடர்பாக 05 பேரும் குடிபோதையில் இருந்த 04 பேரும் மற்றும் 04 சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை (21) பிற்பகல் 3.00 மணியிலிருந்து இரவு 9.00 மணி வரைக்கும் நேற்று முன்தினம் (22) மாலை 5.00 மணிமுதல் இரவு 10.00 மணிவரையிலும் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட அனைவரும் பியகம உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பதுடன், அவர்களை மஹர நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத் துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்த தேடுதல் நடவடிக்கைக்கு பியகம பொலிஸ் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் அஜித் விஜேசிங்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் கலந்துகொண்டனர்.

Now you can subscribe to the below Newspapers mentioned Published by Liberty Publishers.

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| தமிழன் | One Month | 40.00 | 22 | 880.00 |
| | Three Month | | 64 | 2560.00 |
| | Six Month | | 129 | 5160.00 |
| | One Year | | 261 | 10440.00 |
| தமிழன் | One Month | 130.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 1690.00 |
| | Six Month | | 26 | 3380.00 |
| | One Year | | 52 | 6760.00 |

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| the daily morning | One Month | 70.00 | 22 | 1540.00 |
| | Three Month | | 64 | 4480.00 |
| | Six Month | | 129 | 9030.00 |
| | One Year | | 261 | 18270.00 |
| the sunday morning | One Month | 180.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 2340.00 |
| | Six Month | | 26 | 4680.00 |
| | One Year | | 52 | 9360.00 |

FOR MORE INFORMATION PLEASE CONTACT

Address : - The Manager Circulation
Liberty Publishers Private Limited
46/8, Dompe Road,
Kalukondayawa,Malwana.

DELIVERY FREE

Hotline :- 076 136 7623

Tel No: - 0112 127 209

# 'விடத்தல்தீவு அலிகார் வரலாற்று கருவூலங்கள்' நூல் வெளியீடு






ரஸீன் ரஸ்மின்

மன்னார் மாவட்டத்தின் மடு கல்வி வலயத்துக்குட்பட்ட விடத்தல்தீவு அலிகார் மகா வித்தியாலயத்தின் வரலாறுகளை கொண்ட 'விடத்தல்தீவு அலிகார் வரலாற்று கருவூலங்கள்' என்னும் நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் (22) புத்தளம் தில்லையடி ஆர்.ஜே. மண்டபத்தில் இடம்பெற்றது.

தினகரன் பத்திரிகையின் முன்னாள் இணை செய்தி ஆசிரியரும் சிரேஷ்ட எழுத்தாளருமான சுஜப்.எம்.காசிம் இந்த நூலை எழுதியிருந்தார்.

வடக்கில் பிரபலமான பாடசாலையாக காணப்பட்ட அலிகார் பல்துறையாளர்களை உருவாக்கிய நிலையில் 90களுக்கு முன்பும், அதற்கு பிற்பாடு வடபுல முஸ்லிம்களின் வெளியேற்றத்தின் பின்பும் விடத்தல்தீவு அலிகார் மகா வித்தியாலயத்தின் பதிவுகளை மையமாகக் கொண்ட இந்த நூலினை சுஜப்.எம்.காசிம் எழுதியுள்ளார்.

மேற்படி வெளியீட்டு விழா தேசிய கல்வி நிறுவகத்தின் திட்டமிடல் பணிப்பாளரும் கல்வி அமைச்சின் பாடவிதான அபிவிருத்தி நிலைய கணித பாட கருத்திட்ட உறுப்பினருமான எம்.ஏ.வாஹித் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் அதிதியாக மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மாணிக்கவாசகர் ஸ்ரீஸ்கந்த குமார் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றியதுடன், நூலினையும் வெளியிட்டு வைத்தார்.

இதேவேளை முன்னாள் நிதி அமைச்சின் மேலதிக பணிப்பாளர் நாயகமும் நூலாக்க குழுவின் தலைவருமான ஏ.எம்.அமீன் வரவேற்புரையினை நிகழ்த்த நூலாசிரியர் பற்றிய விளக்கத்தினை வவுனியா பல்கலைக்கழக ஆங்கிலத் துறை தலைவர் விரிவுரையாளர் பேராசிரியர் ஞானசீலன் வழங்கினார்.

நூலாய்வினை ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கான முன்னாள் வதிவிடப் பிரதிநிதியும் சிறந்த இலக்கியவாதியுமான ஏ.எல்.எ.அசீஸ் நிகழ்த்தினார். சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் சட்டத்தரணி அமீர் பாயிஸ் உள்ளிட்ட பலரும் இதன்போது உரையாற்றினர்.

அலிகார் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவிகளினால் பாடசாலை கீதம் இசைக்கப்பட்டது. மேலும், மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மாணிக்கவாசகர் ஸ்ரீஸ்கந்த குமார் நூலாசிரியர் சுஜப்.எம்.காசிமுக்கு சினைவுச் சின்னம் ஒன்றினை வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

# விசேட தேவையுடைய பிள்ளைகளின் உயர்க்கல்விக்கு கல்வியமைச்சு கவனம்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவிப்பு



''கல்வி அமைச்சின் கண்காணிப்பின் கீழ் விசேட தேவையுடைய பிள்ளைகளின் உயர்க்கல்வி தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்'' என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

விசேட தேவையுடைய சமூகத்தின் கல்வியை மேம்படுத்துவதற்காக அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனங்களுடன் தொடர்புடைய குழுவினருடனான சந்திப்பொன்று பெப்ரவரி 22 ஆம் திகதி பாராளுமன்ற வளாகத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

தேசிய மற்றும் சர்வதேச விதிமுறைகளை கவனத்திற் கொண்டு விசேட தேவைகள் உள்ளவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட ஒரு முன்மொழிவை அவர்கள் முன்வைத்தனர்.

விசேட தேவையுடையோரின் உரிமைகளை வலுப்படுத்துதல், விசேட தேவையுடைய பிள்ளைகளின் கல்வித் தரத்தை உயர்த்துதல் மற்றும் அவர்களுக்கான உயர்க்கல்வி நிலைகளை அறிமுகம் செய்தல் போன்ற பல விடயங்கள் குறித்து இந்த முன்மொழிவில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மதியிருக்கம் (ஒட்டிசம்) நோயால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் கல்வியை உயர்த்தவும் அநாதை பிள்ளைகளுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தவும் தற்போதைய அரசு 2025 வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதை அவர்கள் பாராட்டினர்.

இங்கு கருத்துத் தெரிவித்த பிரதமர்,

"விசேட தேவையுடையவர்கள் பொதுச் சமூகத்தில் இயல்பான வாழ்க்கையை முன்னெடுக்க தேவையான சமூக அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும். Clean sri lanka திட்டத்தினூடாகவும் நாம் அதனை செய்ய எதிர்பார்க்கின்றோம்.

எமது நாட்டில் பல கொள்கைகள் இருந்தாலும் அவை நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பதுதான் பிரச்சினை. நாம் பார்ப்பது போல், கொள்கைகளை செயற்படுத்துவதற்கு நிதி ஒதுக் கப்பட வேண்டும் என்பது இங்கு மிகவும் முக்கிய விடயம். அதுதான் 2025 வரவு-செலவுத்திட்டத்தில் பல்வேறு பணிகளுக்கு குறிப்பாக நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம்.

கல்வி அமைச்சின் மேற்பார்வையின் கீழ், விசேட தேவையுடைய பிள்ளைகளின் உயர்க் கல்வியை ஒரு தலைப்பாக மாற்றுவதற்கு எதிர்பார்க்கிறோம். அதற்கு தேவையானவர்களை நியமித்துள்ளோம்.

கல்வியில் ஒரு பாரிய மாற்றத்துக்கு நாம் இப்போது தயாராகி வருகிறோம். 2025ஆம் ஆண்டு இது தொடர்பான கொள்கைகள் தயாரிக்கப்பட்டு, 2026இல் இதை நடைமுறைப்படுத்தத் தொடங்குவோம். இது முழு முறைமையையும் மாற்றும் நீண்டகாலத் திட்டம். நிச்சயமாக, விசேட தேவைகளைக் கொண்ட பிள்ளைகளின் கல்வி முறைக்கு விசேட கவனம் செலுத்தப்படும்.

அனைத்து பாடசாலைகளிலும் விசேட தேவையுடைய பிள்ளைகள் வழமை போன்று கல்வியில் ஈடுபடுவதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க எதிர்பார்க்கின்றோம். ஆனால் இது ஒரு பெரிய செயல்முறை. ஒரேயடியாக அதைச் செய்ய முடியாது. படிப்படியாக அந்த இலக்குகளை அடைவோம் என்று நம்புகிறோம். முதற்கட்ட நடவடிக்கையாக, ஒரு கல்வி நிர்வாக வலயத்தில் குறைந்தபட்சம் ஒரு பாடசாலையிலாவது இந்த பிள்ளைகளை கல்வி கற்க தகுதியுடையவர்களாக மாற்ற நாங்கள் பணியாற்றி வருகிறோம்" என்று பிரதமர் கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர் சுகத் வசந்த டி சில்வா, முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி டி.டி.டி.எல்.தனபால உள்ளிட்ட விசேட தேவையுடையோர் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் குழு இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# எதிர்க்கட்சியின் மேலதிகப் பிரதிநிதித்துவம் தொடர்பில் சாதகமாகக் கருத்திற்கொள்ள ஆளுங்கட்சி இணக்கம்




எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களுக்கு குழுக்களில் அதிக பிரதிநிதித்துவம் வழங்குமாறு எதிர்க்கட்சி அரசியல் கட்சிகள் விடுத்த கோரிக்கையை கருத்திற்கொள்ள விசேட கட்சித் தலைவர்கள் கூட்டம் நேற்று முன்தினம் (22) இடம்பெற்றதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் பிரதமர் ஹரிணி அமரசூரியவும் கலந்துகொண்டார்.

இந்தக் கோரிக்கைகள் தொடர்பில் சபாநாயகரினால் கடந்த 19ஆம் திகதி சபையில் அறிவித்த தீர்மானம் தொடர்பில் நன்றி தெரிவித்து இந்த விடயம் சம்பந்தமான ஆளுங்கட்சியின் நிலைப்பாட்டை சபை முதல்வர் சபாநாயகருக்கு எழுத்துமூலம் அறிவித்திருந்ததுடன், அந்தக் கடிதம் இதன்போது வாசிக்கப்பட்டது.

அதனையடுத்து, குழுக்களில் எதிர்க்கட்சியின் அங்கத்துவத்தை அதிகரிக்குமாறு எதிர்க்கட்சி முதற்கோலாசான் விடுத்த கோரிக்கை தொடர்பில் சாதகமாகக் கருத்திற்கொண்டு ஆளுங்கட்சியின் தீர்மானத்தை விரைவாக வழங்குவதாக சபை முதல்வர் இந்தக் கூட்டத்தில் மேலும் தெரிவித்தார்.

# பாடகி யொஹானியின் இசை நிகழ்வுக்கு எதிராக பிரித்தானியாவில் கண்டனப் போராட்டம்!




பிரித்தானியாவிலுள்ள 15 கேவென்டிஷ் சதுக்கத்தில் நடைபெற்ற, பாடகி யொஹானியின் இசை நிகழ்வுக்கு எதிராக தமிழீழ சுயநிர்ணய அமைப்பினால் எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யொஹானியின் தந்தையான மேஜர் ஜெனரல் பிரசன்ன டி சில்வா போர்க்குற்றங்கள் தொடர்பான ஐ.நா. அறிக்கையில் பெயரிடப்பட்ட 55ஆவது பிரிவுக்கு தலைமை தாங்கியுள்ளார்.

அதனாலேயே யொஹானிக்கு எதிராக இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# வத்திராயனில் தாக்குதலுக்குள்ளாகிய நால்வரில் ஒருவர் உயிரிழப்பு!

பு.கஜிந்தன்

யாழ். வடமராட்சி கிழக்கு வத்திராயன் பகுதியில் கடந்த 19ஆம் திகதி மாலை வவுனியாவிலிருந்து வந்தவர்களால் நால்வர் மீது மோசமான தாக்குதல் நடத்தப்பட்டது.

குடும்பத் தகராறின் காரணமாக வெளிநாட்டிலிருந்து வருகை தந்த நபர் ஒருவர் அடியாட்களை அழைத்து வந்து, தனது தந்தை மீதும் சகோதரன் மீதும் சகோதரனின் மனைவி மற்றும் மகன் மீதும் இரும்புக்கம்பி மற்றும் கற்களால் தாக்குதல் நடத்தியிருந்தார்.

அடி காயங்களுக்குள்ளான நால்வரும் மருதங்கேணி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக இருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, அங்கிருந்து ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

பலத்த காயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த வடமராட்சி கிழக்கு வத்திராயன் பகுதியைச் சேர்ந்த நபர் நேற்று (23) சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# அறிவின் மையம் தொடர்பாக ஜனாதிபதி அநுரவுக்கு ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் கடிதம்!

பு.கஜிந்தன்

இலங்கையின் தற்போதைய பொருளாதார மற்றும் சமூக சூழ்நிலையையும் மக்களது வாழ்வாதார நிலைமைகளையும் கருத்தில் கொண்டு இம்முறை முன்வைத்துள்ள வரவு - செலவுத் திட்டத்தை வரவேற்பதாக தெரிவித்துள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, யாழ். நூலகத்துக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான தனது எதிர்பார்ப்பினையும் வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பாக, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதிக்கு எழுதப்பட்ட கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

"குறித்த வரவு - செலவுத் திட்டத்தின் அடிப்படையில், வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ள தீர்மானித்துள்ள விடயங்கள் தொடர்பில் தங்களது அவதானத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

குறிப்பாக யாழ்ப்பாணம் பொது நூலகத்தை மிக அதிகமானோர் பயன்படுத்தி வருகின்றனர் என்பதை நீங்களே உங்களது உரையில் கூறியிருக்கிறீர்கள்.

அதற்கென இம்முறை 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளீர்கள். அதனைப் பயன்படுத்தி நூலகத்தை முழுமையாக டிஜிட்டல் மயப்படுத்துவதன் மூலமாக, இன்றைய மற்றும் எதிர்கால தலைமுறையினர் இலகுவாக இந்த நூலகத்தை பயன்படுத்தும் நிலையை உருவாக்க முடியும் என்பதுடன், ஆவணங்களைப் பாதுகாத்து பராமரிப்பதற்கும் இடவசதியினைப் பேணுவதற்கும் வசதியாக இருக்கும்.

அதேபோன்று, கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள நூலகத்துக்கு சொந்தமான காணி இராணுவத்தின் வசமிருந்த நிலையில், சில வருடங்களுக்கு முன்னர் குறித்த காணியின் ஒரு பகுதி விடுவிக்கப்பட்டு, கரைச்சி பிரதேச சபையினால் கட்டிடம் கட்டப்பட்டபோதிலும், குறித்த கட்டிடம் மூடப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றது.

எனவே, குறித்த கட்டிடத்துக்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி நூலகத்தினை மக்கள் பாவனைக்கு கையளிப்பதுடன், நூலகத்துக்கான எஞ்சிய காணியை விடுவிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறேன்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்பதாக கடந்த காலங்களில் அழிக்கப்பட்ட யாழ் நூலகத்தினை அழிவின் சின்னமாக பாதுகாக்க வேண்டும் என்று சில தமிழ்த் தரப்புகள் வலியுறுத்தியபோதிலும், அறிவின் மையமாக உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்தினை முன்வைத்து, அப்போது ஆட்சியிலிருந்த முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் தற்போதைய நூலகம் உருவாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் அமைந்துள்ள ரயில் நிலையங்களை அழகுபடுத்திய மாவட்ட சாரணர்கள்







சி.திவியா

சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகர் ரொபேர்ட் பேடன் பவல் பிரபுவின் 168 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு இலங்கை சாரண சங்கத்தின் வவுனியா மாவட்ட கிளையின் சாரணர்கள் வவுனியாவிலுள்ள ரயில் நிலையங்களை அழகுபடுத்தும் செயற்பாட்டை முன்னெடுத்திருந்தனர்.

சாரணர் சங்கத்தின் மாவட்ட ஆணையாளர் யோ.கஜேந்திரன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதன்படி வவுனியா ரயில் நிலையம், தாண்டிக்குளம் ரயில் நிலையம், ஓமந்தை ரயில் நிலையம், புளியங்குளம் ரயில் நிலையம், செட்டிக்குளம் ரயில் நிலையம் ஆகிய ரயில் நிலையங்களை ஒரே நாளில், ஒரே நேரத்தில் அழகுபடுத்தும் செயற்பாடுகளில் வவுனியா சாரணர்கள் ஈடுபட்டனர்.

இத்திட்டம் தேசிய சாரணர் தலைமையகத்தின் கருத்தாக்கம் மற்றும் கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்துடன் இணைந்து செயற்படும் தேசிய வேலைத்திட்டமாகும்.

இதன் பிரதான நிகழ்வு வவுனியா பிரதான ரயில் நிலையத்தில் இடம்பெற்றது. ரயில் நிலையத்தை சூழவுள்ள பகுதிகளிலுள்ள பிளாஸ்டிக், பொலித்தீன், ஏனைய கழிவுகளை அகற்றி ரயில் நிலையத்தை தூய்மையான இடமாக மாற்றியமைத்தனர்.

இந்நிகழ்வில், வவுனியா ரயில் திணைக்கள அதிபர் சி.அகிலேஸ்வரன், இலங்கை சாரணர் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தின் உதவி ஆணையாளர் எஸ்.மயூரன், மாவட்ட சாரணசங்கத்தின் நிர்வாக உறுப்பினர்கள், உதவி மாவட்ட ஆணையாளர்கள், திரி சாரணர்கள், சமாதானத்துக்கான தூதுவர் குழுவினர், பொறுப்பாசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# பூர்வீகக் காணிகளை விடுவித்து வாழ்வாதாரத்துக்கு உதவுமாறு வெல்வேரி கிராம மக்கள் கோரிக்கை

(பதுர்தீன் சியானா)



வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தால் கற்கள் இடப்பட்டு கையகப்படுத்தப்பட்டுள்ள தமது பூர்வீகக் காணிகளை விடுவித்து தமது வாழ்வாதாரத்துக்கு உதவுமாறு வெல்வேரி கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

திருகோணமலை – வெல்வேரி கிராமத்தில் பல தசாப்த காலமாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வாழ்ந்து வந்த மக்கள் நாட்டில் ஏற்பட்ட தொடர்ச்சியான வன்செயல் காரணமாக உயிர் அச்சுறுத்தலுக்கு மத்தியில் அங்கிருந்து தொடர்ச்சியாக இடம்பெயர்ந்து மீள குடியமர்ந்து வந்தனர்.

இந்நிலையில், 1983ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்து பாதுகாப்பின் காரணமாக மீண்டும் மீள குடியமர அனுமதிக்கப்படாத நிலையில், 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் குறித்த பகுதியில் வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தால் எல்லைக் கற்கள் இடப்பட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

1970ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே 30க்கும் மேற்பட்ட குடும்பங்கள் அப்பகுதியில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்ததாகவும் வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள பகுதிக்குள் தாங்கள் வாழ்ந்தமைக்கான அடையாளங்களாக வீட்டின் சிதைவுகள், சீமெந்தால் கட்டப்பட்ட சுமார் 10 அடி விட்டமுடைய பல கிணறுகள், நீர்ப்பாசனம் மேற்கொள்ளப்பட்ட கால்வாய்கள் உட்பட பல ஆதாரங்களும் தமது காணிக்கான ஆவணங்களும் வைத்திருப்பதாகவும் குறிப்பிடுகின்றனர்.

அத்துடன், தமது காணியைச் சுற்றியுள்ள ஏனைய பகுதிகளில் விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், குறுகிய பரப்பளவைக் கொண்ட தமது காணிகள் மாத்திரம் வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தால் விடுவிக்கப்படாமலிருப்பதாகவும் கவலை வெளியிடுகின்றனர்.

எனவே, வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள சுமார் 40 ஏக்கருக்கும் மேற்பட்ட தமது காணிகளை விடுவித்து தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதோடு நாட்டின் நெல் உற்பத்திக்கு பங்களிப்புச் செய்வதற்கான வாய்ப்புகளை வழங்குமாறும் புதிய அரசிடம் கோரிக்கை விடுப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

# வைத்தியசாலை மலசலகூடத்தில் குழந்தையை பெற்று யன்னல் வழியாக தூக்கியெறிந்த மாணவி கைது

## உயிர் தப்பியது குழந்தை

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை மலசலகூடத்தில் குழந்தையைப் பெற்று யன்னல் வழியாக தூக்கியெறிந்த 18 வயது மாணவியொருவரை மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை (23) அதிகாலையில் இடம்பெற்றுள்ளதாகவும் குழந்தை காப்பாற்றப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டுவருவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, மாவட்டத்தில் பிரதேசமொன்றைச் சேர்ந்த உயர்தரத்தில் கல்விகற்றுவரும் 18 வயதான மாணவியொருவர் சம்பவதினம் அதிகாலை 3.30 மணியளவில் நிறைமாதக் கர்ப்பிணியான இவர் கர்ப்பிணி எனத் தெரிவிக்காது வயிற்றுவலி எனக்கூறி மட்டு. போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு ஆரம்ப சிகிச்சைக்காக குறுந்தரிப்பு அலகு வாட்டில் அனுமதிக்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து வயிற்றுவலியெனத் தெரிவித்த இவரை சரியான முறையில் வைத்தியர் பரிசோதனை செய்யாது அவரது சிறுநீரை எடுத்து சோதனையிட்டு வயிற்றுவலிக்கான ஊசி மூலமான வலிநிவாரண மருந்து கொடுக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அதிகாலை 05 மணியளவில் குறித்த கர்ப்பிணிப் பெண் மலசலகூடத்துக்குச் சென்ற நிலையில், குழந்தையைப் பெற்று யன்னல் வழியாக வீசியுள்ளார். குழந்தை யன்னலின் கீழுள்ள பிளேற்றில் விழுந்துள்ளது.

குழந்தையின் அழுகுரல் கேட்டதையடுத்து தாதியர்கள் அங்கு சென்ற நிலையில் குழந்தையை இவர்தான் பெற்றுள்ளார் என அவர்களுக்குத் தெரியவந்ததையடுத்து வீசிய குழந்தையை மீட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்து சிகிச்சையளித்துள்ளனர். அத்துடன், தாய்க்கும் சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தனர்.

இதேவேளை, குறித்த குழந்தையும் தாயும் பாதுகாப்பாக உள்ளதாக மட்டு. போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி கலாரஞ்சினி கணேசலிங்கம் தெரிவித்தார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வைத்தியசாலை பொலிஸார் மற்றும் மட்டு. தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.





கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தினூடாக மட்டக்களப்பு ரயில் நிலையத்தில் துப்புரவுப் பணிகள் மற்றும் அழகுபடுத்தும் தேசிய வேலைத்திட்டம் சாரணிய அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட உதவி ஆணையாளர் எ.கார்மேகம் தலைமையில் சனிக்கிழமை(22) முன்னெடுக்கப்பட்டது. மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இந்நிகழ்வில் மாவட்டப் பொலிஸ் நிலைய உயரதிகாரிகள், சாரணிய அமைப்பின் மாவட்டப் பிரதிநிதிகள், அங்கத்தவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். மேலும், இவ்வேலைத்திட்டத்தில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 730 சாரணர்கள் பங்குபற்றியதுடன் பயன்தரு மரக்கன்றுகளும் இதன்போது நடப்பட்டன. (மட்டக்களப்பு செய்தியாளர்)

# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பல்துறைசார் சர்வதேச ஆய்வரங்கு

















(மாளிகைக்காடு செய்தியாளர்)

சமகால சமூகப் பிரச்சினைகள் ஓர் உலகளாவிய பார்வை என்ற தொனிப்பொருளிலான ஒரு வார கால பல்துறைசார் சர்வதேச ஆய்வரங்கின் (கலப்பின முறை) முதல் அமர்வு, தென்கிழக்குப் பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் பீட கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை(22) கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் தலைமையில் இடம்பெற்றது.

ஆய்வரங்கின் முதல் அமர்வுக்கு வருகைதந்திருந்த வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு ஆய்வாளர்களை கலை, கலாசார பீடத்தின் சமூகவியல் துறையின் துறைத்தலைவர் பேராசிரியர் எஸ்.எம்.ஐயூப் வரவேற்று உரையாற்றினார்.

பல்துறைசார் சர்வதேச மாநாட்டின் இலங்கை அமர்வின் பிரதம அதிதியாக பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல்.அப்துல் மஜீத் , மாநாட்டின் பிரதான பேச்சாளர்களாக இந்தியாவின் தமிழ்நாடு, பாரதி பெண்கள் கல்லூரியின் (Autonomous) புவியியல்துறை இணைப்பேராசிரியர் சாந்திதேவி மற்றும் இந்தியாவின் மும்பாய் நிர்மலா நிகேதன், சமூக சேவை கல்லூரியின் International Conference Secretariate, ISS, Coordinator - Research & Development Cell, கலாநிதி பெனட் ராஜதுரை ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

மாநாட்டின் கட்டமைப்பு தொடர்பில் இந்தியாவின் தமிழ்நாடு, மெட்ராஸ் பல்கலைக்கழகத்தின் புவியியல்துறை முன்னாள் பேராசிரியர் தி. வசந்தகுமாரன் உரையாற்றினார்.

இலங்கையிலும் இந்தியாவிலும் இடம்பெறவுள்ள குறித்த ஆய்வரங்குக்கு 150க்கும் மேற்பட்ட கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தபோதும் அதில் 109 கட்டுரைகள், நிகழ்வில் சமர்ப்பணத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. நிகழ்வின்போது ஆய்வரங்கில் முன்வைக்கப்பட்ட கட்டுரைகளின் ஆய்வுச் சுருக்கங்கள் அடங்கிய புத்தகமும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

தென்கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்தின் புவியியல்துறையின் துறைத்தலைவரும் ஆய்வரங்கின் இணைப்பாளருமான சிரேஷ்ட விரிவுரையாளர் கே. நிஜாமிர் நன்றியுரையாற்றினார்.

இடம்பெற்ற ஆய்வரங்கின் தொடர் நிகழ்வு, இன்று திங்கட்கிழமை(24) சென்னையில் இடம்பெறவுள்ளது. இந்தத் தொடர் ஆய்வரங்கின் வளவாளர்களாக தென்கிழக்கு பல்கலைக்கழகத்திலிருந்து பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத், புவியியல்துறையின் தவிசு பேராசிரியரும் மாநாட்டின் ஏற்பாட்டாளர்களில் ஒருவருமான எம்.ஐ.எம். கலீல் மற்றும் கலை, கலாசார பீடத்தின் புவியியல்துறைத் தலைவர், சிரேஷ்ட விரிவுரையாளர் கே. நிஜாமிர் ஆகியோர் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





'அமைதி மற்றும் நல்லிணக்கத்துக்கான மொழி' என்ற தொனிப்பொருளில் உலக தாய்மொழி தினம் கிண்ணியா டி.பி. ஜாயா மகளிர் மகா வித்தியாலய அதிபர் எஸ்.டி.நஜீம் தலைமையில் வெள்ளிக்கிழமை(21) பாடசாலையில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட கவிஞரும் இலக்கியவாதியுமான கலாபூஷணம் சித்தி ஷபீனா வைத்துள்ளா சிறப்புச் சொற்பொழிவாற்றியதோடு, பாடசாலை நூலகத்துக்கு அவரால் எழுதப்பட்ட நூல்களையும் பாடசாலை அதிபரிடம் அன்பளிப்புச் செய்தார். மேலும் தாய் மொழியின் மகிமை தொடர்பாகவும் அதன் அவசியம் குறித்தும் மாணவர்களால் வீதி ஊர்வலமொன்றும் நடத்தப்பட்டது. (சீனக்குடா செய்தியாளர்)

# 'பிடியளவு கமநிலத்துக்கு' விழிப்புணர்வு நிகழ்வு





(வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்)

'பிடியளவு கமநிலத்துக்கு' இலங்கையில் பயிரிடப்படாத சகல கமத்தொழில் காணிகளையும் வினைத்திறனாகப் பயிரிடும் தேசிய செயற்பாட்டுக்கு ஒன்றிணைவோம் என்ற தொனிப்பொருளில் விழிப்புணர்வு வீதி நாடக நிகழ்வு சனிக்கிழமை(22) வாகரை பிரதேச வட்டவான் விவசாயக் கண்டத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களப் பிரதி ஆணையாளர் கி.ஜகன்நாத்தின் வழிகாட்டலில் வாகரை கமநல சேவைகள் நிலைய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் க.கலியகராஜ் தலைமையில் பிரதேச விவசாயிகளுக்கு மேற்படி விடயம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு கதிரவன் விழிப்புணர்வு அரங்கக் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கிராம சேவகர் எம்.நவீன் உட்பட வாகரை கமநல சேவைகள் நிலையத்துக்குட்பட்ட கமநல அமைப்புகளின் பிரதிநிதிகளும் விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# ஆவாகுழு பாணியில் ஐவர்மீது வாள்வெட்டுத் தாக்குதல்

## இருவர் படுகாயம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு ஆரையம்பதி மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்தவர்கள் மீது வியாழக்கிழமை (20) மாலை 06 மணியளவில் 05 பேர் கொண்ட குழுவொன்று வாள்களுடன் நுழைந்து தாக்குதல் நடத்தியதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் மட்டு. போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதில் தாக்குதலை மேற்கொண்டு தப்பியோடி தலைமறைவாகியுள்ளவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கையை முன்னெடுத்துவருவதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது, ஆரையம்பதி மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் சம்பவதினமான கடந்த வியாழக்கிழமை மாலை 06 மணிக்கு மின்னொளியில் இளைஞர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். இதன்போது அங்கு வாள்களுடன் நுழைந்த ஐவர் கொண்ட வாள் வெட்டுக்குழு விளையாடிக் கொண்டிருந்த சிலர் மீது துரத்தித்துரத்தி வாளால் வெட்டி தாக்குதல் நடத்தியதில் இருவர் படுகாயமடைந்த நிலையில், மட்டு. போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டதையடுத்து அந்தப் பகுதியில் பெரும் பதற்றநிலை ஏற்பட்டது.

இதனையடுத்து அங்கு தாக்குதலை நடத்திய வாள்வெட்டுக் குழுவினர் அங்கிருந்து தப்பியோடியுள்ளதுடன் கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் கோவிலொன்றில் காயமடைந்தவர்களுக்கும் தாக்குதலை நடத்திய வாள்வெட்டுக் குழுவுக்குமிடையே இடம்பெற்ற தகராறையடுத்து பழிவாங்கும் நோக்கோடு இந்த வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

யாழ். ஆவாக்குழுவின் பாணியில் இடம்பெற்ற சம்பவத்தால் பிரதேச மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளதுடன் அச்சமடைந்துள்ளனர். இந்தத் தாக்குதலை மேற்கொண்டவர்கள் தலைமறைவாகியுள்ளதாகவும் அவர்களைக் கைது செய்ய நடவடிக்கை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய வருடாந்த அணிவகுப்பு மரியாதை





(பாறுக் ஷிஹான்)

கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அணிவகுப்பு மரியாதை மற்றும் பரிசோதனை நிகழ்வு கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ரம்சீன் பக்கீர் தலைமையில் சனிக்கிழமை (22) கல்முனை உவெஸ்லி பாடசாலை மைதானத்தில் நடைபெற்றன.

இந்நிகழ்வுக்கு அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எச்.ஜி.டி.எஸ். அமரசிங்க பிரதம அதிதியாகக் கலந்துகொண்டதுடன் கல்முனைப் பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இப்னு அசாரின் நெறிப்படுத்தலில் அணிவகுப்பில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களின் அணிவகுப்பு மரியாதையைப் பார்வையிட்டு ஏற்றுக்கொண்டார்.

மேலும் பொலிஸாரால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் பொலிஸ் சேவைப் பிரிவு நிலையங்கள், சுற்றுச் சூழல், பொலிஸ் உத்தியோகத்தர்களின் தங்குமிட அறைகளைப் பார்வையிட்டதுடன் பொலிஸார் பயன்படுத்தும் வாகனங்களையும் பரிசோதனை மேற்கொண்டார்.

இந்நிகழ்வில் பொலிஸ் உப பரிசோதகர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# இலங்கை தேசிய கட்டுமான சங்கத்தின் 28ஆவது வருடாந்த விருது வழங்கல்





(ஒலுவில், அட்டாளைச்சேனை செய்தியாளர்கள்)

இலங்கை தேசிய கட்டுமான சங்கத்தின் 28ஆவது வருடாந்த விருது வழங்கும் விழா அச்சங்கத்தின் அம்பாறை, கல்முனைக் கிளையின் தலைவர் எம்.சீ.எம்.ஹசீர் தலைமையில் வெள்ளிக்கிழமை (21) அம்பாறை மிண்டாடா ஹோட்டலில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம பிரதம அதிதியாகவும் இலங்கை தேசிய கட்டுமான சங்கத்தின் தலைவர் டரிட்டன் போல் கௌரவ அதிதியாகவும் அம்பாறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் அசல ஹேரத் விசேட அதிதியாகவும் பொறியியலாளர்கள், தேசிய கட்டுமான சங்கத்தின் முக்கியஸ்தர்கள், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

தேசிய கட்டுமான சங்கத்தின் பிராந்திய தவிசாளர்கள், உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்ட இந்நிகழ்வில் 2024 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிறந்த முறையில் கட்டுமானப் பணிகளை முன்னெடுத்த நிறுவனங்களுக்கு கட்டுமான சிறப்பு விருது மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அத்துடன், தேசிய கட்டுமான சங்கத்தின் அம்பாறை, கல்முனைக் கிளையின் தலைவர்களாக செயற்பட்டு சங்கத்தைச் சிறப்பாக வழிநடத்தியமைக்காக அதன் முன்னாள் தலைவர்களான ஐ.எல்.எம்.மிஜ்வாத், கே.எம்.சக்கரியா ஆகியோரும் இந்நிகழ்வில் விசேட விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன், நிர்மாணத்துறையில் நேர்த்தியாகவும் சிறந்த முறையிலும் பணிகளை முன்னெடுத்த நிறுவனங்கள், ஒப்பந்தக்காரர்கள் எனப் பலர் இதன்போது விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பாப்பரசரின் உடல்நிலை தொடர்ந்தும் கவலைக்கிடம்

## வத்திக்கான் தேவாலயம் அறிவிப்பு; நலம்பெறவேண்டி உலகெங்கும் பிரார்த்தனை



பாப்பரசர் பிரான்சிஸின் உடல்நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக வத்திக்கான் அறிவித்துள்ளது.

கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான பாப்பரசர் பிரான்சிஸ் (88 வயது), உடல் நலக்குறைவு காரணமாக கடந்த 14ஆம் திகதி ரோம் நகரிலுள்ள ஜெமெல்லி (Gemelli)வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அங்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனையில், அவருக்கு நிமோனியா பாதிப்பு ஏற்பட்டிருப்பது உறுதிசெய்யப்பட்டது. இதையடுத்து, அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

சிறுவயதிலேயே நுரையீரலில் ஒரு பகுதி அகற்றப்பட்ட பாப்பரசர் பிரான்சிஸுக்கு நீண்ட காலமாகவே உடல்நலப் பிரச்சினைகள் இருந்து வருகின்றன.

இந்நிலையில், கடந்த வியாழக்கிழமை மாலை அவரின் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டதாகவும், அவரது இதயம் நன்றாக செயல்படுவதாகவும் வத்திக்கான் நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, கடந்த வெள்ளிக்கிழமை காலை வெளியான தகவலின்படி, 'இரவு அவர் நன்றாக ஓய்வெடுத்தார். காலை எழுந்து காலை உணவை உட்கொண்டார்' என தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், தற்போது, பாப்பரசரின் உடல் நிலை மோசமடைந்துள்ளதாகவும், ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் வத்திக்கான் நிர்வாகம் சார்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அவருக்கு இரத்தத்தில் ஒரு வகை இரத்த அணுக்கள் குறைவாக இருந்ததால் இரத்தம் செலுத்தப்பட்டுள்ளது. பாப்பரசர் பிரான்சிஸ் சுய நினைவுடன் தான் இருக்கிறார் என்றும், எனினும் மூச்சு விடுவதில் சிரமம் இருப்பதால், ஒக்சிசன் அளிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



இந்நிலையில் பாப்பரசரின் உடல்நிலை தொடர்ந்து கவலைக்கிடமாக இருப்பதால் அவர் குணமடைய பிரார்த்தனை செய்யுமாறு கத்தோலிக்கர்களை வத்திக்கான் தேவாலய நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.


பாப்பரசர் போப்பின் உடல்நிலை குறித்து வத்திக்கான் தேவாலயம் வெளியிட்ட சமீபத்திய அறிக்கை உலகெங்கிலுமுள்ள கத்தோலிக்கர்கள் மற்றும் நலன்விரும்பிகள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது. பாப்பரசர் பிரான்சிஸ் உடல் நலம் பெற உலகம் முழுவதுமுள்ள கிறிஸ்தவர்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டுள்ளனர்.

பாப்பரசர் பிரான்சிஸ் 2022இல் முழங்கால் வலி ஏற்பட்டதால் அறுவை சிகிச்சை செய்து கொண்டார். பின்னர். 2023இல் குடலிறக்க அறுவை சிகிச்சை செய்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.



# சிவராத்திரியுடன் நிறைவடைகிறது மகா கும்பமேளா

## இதுவரை புனித நீராடிய 62 கோடி பேர்



உத்தர பிரதேசம், பிரயாக்ராஜில் நடைபெற்றுவரும் மஹா கும்பமேளா எதிர்வரும் 26ஆம் திகதி மகா சிவராத்திரி தினத்தில் நிறைவடையவுள்ளது. சில நாட்களே இருப்பதால் பக்தர்கள் கூட்டம் அதிகரித்து வருகிறது. திரிவேணி சங்கமத்தில் இதுவரை 62 கோடிக்கும் மேற்பட்ட பக்தர்கள் புனித நீராடியுள்ளனர்.

பிரயாக்ராஜ் நகரில் மகா கும்பமேளா நிகழ்ச்சி கடந்த மாதம் 13ஆம் திகதி ஆரம்பமாகியது. எதிர்வரும் 26ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. மூன்று நதிகள் சங்கமிக்கும் திரிவேணி சங்கமத்தில் தினமும் இலட்சக்கணக்கான பக்தர்கள் புனித நீராடி வருகின்றனர். குறிப்பாக மகர சங்கராந்தி, மவுனி அமாவாசை, வசந்த பஞ்சமி ஆகிய நாட்களில் பக்தர்களின் எண்ணிக்கை கட்டுக்கடங்காமல் இருந்தது.

இந்நிலையில், மகா கும்பமேளாவில் இதுவரையில் 62 கோடி பேர் பங்கேற்று புனித நீராடி இருப்பதாக உத்தர பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் தெரிவித்துள்ளார்.

உத்தர பிரதேசம், பிரயாஜ்ராஜில் கடந்த ஜனவரி 13ஆம் திகதி மஹா கும்பமேளா தொடங்கியது. ஒவ்வொரு நாளும் சுமார் ஒரு கோடிக்கும் மேற்பட்ட பக்தர்கள் பிரயாக்ராஜ் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி வருகின்றனர். கடந்த 29ஆம் திகதி மவுனி அமாவாசை நாளில் மட்டும் சுமார் 10 கோடி பேர் புனித நீராடினர். அன்றைய தினம் கூட்டநெரிசல் ஏற்பட்டு 30 பேர் உயிரிழந்தனர். அதன்பின்னர் கூட்டத்தை கட்டுப்படுத்த பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தற்போது சுமார் 10 கி.மீ. தொலைவு நடந்து சென்று பக்தர்கள் புனித நீராடி வருகின்றனர்.

இதுகுறித்து உத்தர பிரதேச அரசு வட்டாரங்கள் கூறியதாவது,

மகா கும்பமேளாவை ஒட்டி பிரயாக்ராஜில் சுமார் 10,000 ஏக்கர் பரப்பளவில் பிரம்மாண்ட நகரம் உருவாக்கப்பட்டுள்ளது. அதற்குள் கூடார நகரம், கோபுர நகரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒரே நேரத்தில் சுமார் ஒரு கோடி பேர் தங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பக்தர்களுக்காக 1.5 இலட்சம் கழிப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளன. சுமார் 250 ஏடிஎம், குடிநீர் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் 24 மணி நேரமும் பக்தர்களுக்கு குடிநீர் வழங்கப்படுகிறது. ஒரு நாளில் 650 மெட்ரிக் தொன் குப்பைகள் அகற்றப்படுகின்றன. குப்பைகளை அகற்ற 10,000 துப்புரவு பணியாளர்கள், 350 இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. திரிவேணி சங்கமம் பகுதி நீரை தூய்மைப்படுத்த 3 சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் எதிர்வரும் 26ஆம் திகதி மகா கும்பமேளா நிறைவடைதால் கடந்த சில நாட்களாக பக்தர்களின் கூட்டம் அதிகரித்து வருகிறது. இதன்காரணமாக பிரயாக்ராஜ் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் நாள்தோறும் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது. மகா கும்பமேளாவின் 41ஆவது நாளான சனிக்கிழமை மட்டும் சுமார் 1.50 கோடி பக்தர்கள் புனித நீராடியுள்ளனர். மத்திய அமைச்சர் ஜே.பி.நட்டா, நடிகை தமன்னா, கேரள ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் உள்ளிட்ட விவிஐபிக்களும் சனிக்கிழமை புனித நீராடினர்.

இந்நிலையில் எதிர்வரும் 26ஆம் திகதி மகா சிவராத்திரி தினத்துடன் மஹா கும்பமேளா நிறைவடைகிறது. அன்றைய தினம் பிரயாக்ராஜில் இலட்சக்கணக்கான பக்தர்கள் கூடுவார்கள் என்பதால் பல்வேறுகட்ட முன்னேற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# இஸ்ரேல் பணயக் கைதிகள் அறுவரை ஒப்படைத்தது ஹமாஸ்

ஹமாஸ் அமைப்பினர் மேலும் 6 இஸ்ரேல் பணயக் கைதிகளை செஞ்சிலுவை சங்கத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே கடந்த ஜனவரி மாதம் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன்படி, பணயக் கைதிகளாக பிடித்துச் சென்ற இஸ்ரேலியர்களை ஹமாஸ் தீவிரவாதிகள் படிப்படியாக விடுவித்து வருகின்றனர். பதிலுக்கு பலஸ்தீன கைதிகளை இஸ்ரேல் விடுவித்து வருகிறது.

அந்த வகையில், நியூசீரத் நகரிலிருந்த ஓமர் வென்கெர்ட், ஓமர் ஷெம் டோவ் மற்றும் எலியா கோஹென் ஆகிய 3 இஸ்ரேல் பணயக் கைதிகளை ஹமாஸ் அமைப்பினர் செஞ்சிலுவை சங்கத்தினரிடம் நேற்று முன்தினம் ஒப்படைத்தனர். போலி இராணுவ உடையிலிருந்த அவர்கள் வாகனம் மூலம் இஸ்ரேலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். முன்னதாக 2 பணயக் கைதிகள் ராபா நகரிலிருந்து விடுவிக்கப்பட்டனர். இதுதவிர, ஹிஷாம் அல்-சயீத் என்பவரும் காஸா நகரிலிருந்து விடுவிக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. ஒப்பந்தப்படி விடுவிக்கப்பட வேண்டிய 33 பணயக் கைதிகளில் இந்த 6 பேர்தான் கடைசி எனக் கூறப்படுகிறது.

கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் 7ஆம் திகதி காசா எல்லையை ஒட்டிய இஸ்ரேல் பகுதியில் நடைபெற்ற ஓர் இசைக் கச்சேரியில் புகுந்த ஏராளமான ஹமாஸ் போராளிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். அத்துடன் அந்த நிகழ்ச்சியில் பங்கேற்றிருந்த வெளிநாட்டினர் உட்பட ஏராளமான இஸ்ரேலியர்களை அவர்கள் பணயக் கைதிகளாக பிடித்துச் சென்றனர்.





**இஸ்ரேல் பணயக்கைதியொருவர் ஹமாஸ் படையினரின் நெற்றியில் அன்பு முத்தம் கொடுத்து விடைபெற்றபோது....**

இதனையடுத்து இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போராளிகளுக்கிடையிலான போர் தீவிரமடைந்தது.

காஸாமீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் இதுவரை 48,319 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், 111,749 பேர் காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வௌவால்கள் மூலம் பரவும் புதிய வைரஸ்:

# மீண்டும் விஸ்வரூபமெடுக்கும் புதிய வகை கொரோனா



## சீன ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடிப்பு



புதிய வகை கொரோனா வைரஸ் மனிதர்களுக்கு பரவுகிறது என்பதை சீன ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

சீனாவின் வூஹான் மாகாணத்தில் கடந்த 2019 டிசம்பர் இறுதிப் பகுதியில் பரவிய கொவிட் -19 வைரஸ் தொற்று உலகம் முழுவதையும் ஆட்டிப்படைத்தது. இந்நிலையில் மீண்டும் ஒரு புதிய கொரோனா வைரஸ் பரவுவதை சீனா கண்டுபிடித்துள்ளது. சீனாவின் நச்சுயிரியல் வல்லுநரான ஷி ஷெங்லி தலைமையிலான ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட ஆய்வில் புதிய வகை வைரஸ் பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளது.

இந்த புதிய வைரஸ் மெர்பெகோ வைரஸ் குடும்பத்தைச் சேர்ந்த மெர்ஸ் - கொவிட் துணை வகையைச் சேர்ந்தது என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். இது எச்கேயு5 கொரோனா வைரஸ் பரம்பரையைச் சேர்ந்தது என்பதும் ஆய்வில் தெரியவந்துள்ளது. இந்த புது வைரஸ் முதன் முதலில் ஹொங்கொங்கிலுள்ள ஜப்பானிய பிபிஸ்ட்ரெல் வௌவால்களில் அடையாளம் காணப்பட்டது.

எச்கேயு5-கோவிட்-2 மனிதர்களுக்கு நேரடியாகவோ அல்லது இடைநிலை உயிரினங்கள் மூலமாகவோ பரவ அதிக வாய்ப்புள்ளது. இந்த வைரஸ் கொரோனாவை போல மனிதர்களின் சுவாச மண்டலத்தை தாக்கி பாதிப்பை ஏற்படுத்தும் தன்மை கொண்டது. இருப்பினும், இதன் வீரியம் கொரோனாவை விடக் குறைவு.

இது மனிதர்களைப் பாதிக்கக்கூடும் என்றாலும், கொரோனாவைப் போல ஆபத்தானது அல்ல.

கொரோனா வகை வைரஸ் உலகெங்கும் பேரழிவை ஏற்படுத்திய நிலையில், அனைத்து வைரஸ்களும் விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்கு எளிதில் பரவாது என்று விளக்கப்பட்டது.

# கொழும்பிலிருந்து பதுளை நோக்கிச் சென்ற பஸ்ஸிலிருந்து துப்பாக்கி ரவைகள் மீட்பு

(ராமு தனராஜா)

கொழும்பிலிருந்து பதுளை நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ்ஸிலிருந்து துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளதாக பண்டாரவளை பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து பதுளை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ்ஸில் பெல்மடுல்ல பகுதிக்கும் ஓபநாயக்க பகுதிக்குமிடைப்பட்ட பகுதியில் ஏறிய நபரொருவரால் கைவிடப்பட்ட பையொன்றிலிருந்த சிறிய இரும்புப்பெட்டியொன்றிலிருந்து 9 எம்எம் ரக தோட்டாக்கள் 113, ரி 56 ரக தோட்டாக்கள் 09, 84 எஸ் ரக தோட்டா 01 என மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இப்பெட்டி நேற்று முன்தினம் (22) நண்பகல் 12.45 மணியளவில் கண்டெடுக்கப்பட்டது. சந்தேகத்துக்கிடமான குறித்த நபர் பையொன்றுடன் பஸ்ஸில் ஏறி நின்றுகொண்டு பயணித்துள்ளதாகவும் இதன்போது அதே பஸ்ஸில் பயணித்த ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரியொருவர் குறித்த நபர் மீது சந்தேகமடைந்து அவரை அவதானித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் குறித்த அதிகாரியின் தொலைபேசிக்கு அழைப்பு வந்ததையடுத்து குறித்த சந்தேக நபர் பதற்றமுற்ற நிலையில், அவ்விடத்திலிருந்து அகன்று சென்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது தேநீர் இடைவேளைக்காக ஊவதென்ன பகுதியில் குறித்த பஸ்ஸை நிறுத்திய பின்னர் தேநீர் அருந்தி விட்டு மீண்டும் பஸ் பயணிக்கும்போது குறித்த சந்தேக நபர் அதே பஸ்ஸில் பயணிக்கவில்லையென்பதுடன் அவர் கொண்டு வந்த பொதி பஸ்ஸில் இருந்ததையும் குறித்த ஓய்வுபெற்ற அதிகாரி அவதானித்துள்ளார்.

பின்னர் பதுளை பொலிஸாருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து பதுளை பொலிஸார் பண்டாரவளை தலைமையகப் பொலிஸ் நிலையத்துக்கு தகவல் தெரிவித்ததைத் தொடர்ந்து பண்டாரவளை நகரில் பஸ் நிறுத்தப்பட்ட வேளையில் குறித்த பொதியை பண்டாரவளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பதுளை மாவட்டத்துக்குப் பொறுப்பான பொலிஸ் மா அதிபர் சுஜித் வெதமுல்ல, பண்டாரவளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் களுபஹனவின் ஆலோசனையின் பேரில் பண்டாரவளை பொலிஸார் குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தேசிய உயர்மட்ட அரசியல் பீட உறுப்பினராக சிவப்பிரகாசம்



மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சர்வதேச மனித உரிமை ஆய்வாளரும் மலையகத்தின் கல்விமானுமாகிய கலாநிதி பி.பி. சிவப்பிரகாசம் தேசிய மக்கள் சக்தியின் தேசிய உயர்மட்ட அரசியல் பீட உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் ஏற்கனவே தேசிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் மலையக தேசிய குழு உறுப்பினருமாவார்.

தேசிய அரசியல் பீட உயர்மட்டக் குழுவானது ஜனாதிபதி, பிரதமர் மற்றும் முக்கிய உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

தேசிய கொள்கைத் திட்டங்களையும் செயற்றிட்டங்களையும் தீர்மானமெடுப்பது இக்குழுவின் பொறுப்பாகும்.

பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதியமைச்சரின் ஆலோசகராகவும் இருக்கும் இவருக்கு, மலையகப் பிரச்சினைகள் குறித்த விடயங்களை தேசிய மட்டத்துக்குக் கொண்டு செல்வதற்கு இது ஒரு வாய்ப்பாக அமையும்.

## ஹட்டன் தனியார் பஸ் நிலையத்தில் நபரொருவர் மீது கத்திக்குத்து

ஹட்டன் தனியார் பஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் (22) பிற்பகல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ்ஸின் பின்னால் பயணியொருவரின் கழுத்தில் நபரொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

காயமடைந்த நபர் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், மேலதிக சிகிச்சைக்காக பேராதனை போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கத்தியால் குத்திய நபரை தமக்குத் தெரியாதெனவும் தாக்கப்பட்டதற்கான காரணம் தெரியவில்லையெனவும் காயமடைந்த நபர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

காயமடைந்தவர் ஹட்டன் டிக்கோயா லெதன்டி தோட்டத்தைச் சேர்ந்த 27 வயதுடையவரெனவும் வீட்டுக்குச் செல்வதற்காக பஸ் நிலையத்துக்குச் சென்றபோது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## துப்பாக்கி வெடித்ததில் ஒருவர் உயிரிழப்பு

தெஹியத்தகண்டிய, முவபதிகேவல, ஹுலங்பந்தனகல பிரதேசத்திலுள்ள தனியார் தோட்டமொன்றில் துப்பாக்கி வெடித்ததில் நபரொருவர் உயிரிழந்துள்ளதாக தெஹியத்த கண்டிய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் தெஹியத்தகண்டிய பொலிஸார், உயிரிழந்தவர் வீரகெட்டிய, நாட்டிகதெனிய, கிராவெர பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய டி.எச்.சுரேஸ் ஸ்ரீமால் எனத் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் (22) தனியார் தோட்டமொன்றில் வேலை செய்துகொண்டிருந்த போது துப்பாக்கி இயங்கியதில் காயமடைந்த குறித்த நபர் தெஹியத்தகண்டிய வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளதாக தெஹியத்தகண்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

# வியட்நாமில் இரண்டாவது உலகத் தமிழர் மாநாடு; நானுஓயா திருச்செல்வம் பங்கேற்பு





(செ.திவாகரன்)

உலக தாய்மொழி தினத்தை முன்னிட்டு வியட்நாமில் இரண்டாவது தடவையாக உலகத் தமிழர் மாநாடு அண்மையில் (21) இடம்பெற்றது.

இதில் நுவரெலியா மாவட்டத்தில் நானுஓயா, ரேஹா ஸ்டீல் ஹாட்வெயார் நிலைய உரிமையாளரும் பிரபல தொழிலதிபரும் சமூக சேவையாளருமான திருச்செல்வம் பங்கேற்றுள்ளார். உலகத் தமிழர் சமூகத்தின் பெருமையையும் ஒற்றுமையையும் முழு உலகுக்கும் எடுத்துரைக்கும் மிகவும் பிரமாண்டமான முறையில் தமிழர் மாநாடு மற்றும் உலகத் தமிழர் வர்த்தக மாநாடு என்ற வகையில் இரண்டாவது தடவையாகக் கொண்டாடப் பட்டது.

குறித்த நிகழ்வில் உலகில் 60க்கும் மேற்பட்ட தமிழ் அறிஞர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்துகொண்டுள்ளனர். அந்தவகையில், இலங்கையில் நுவரெலியா மாவட்டத்தில் நானுஓயா பிரதேசத்தில் வசிக்கும் திருச்செல்வம் கலந்துகொண்டமை பாராட்டுக்குரியதாகும்.

மலையக சமூகத்தின் தனித்துவத்தை இலக்காகக் கொண்டு சிறந்த சொற்பொழிவொன்றையும் நிகழ்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெல்லவாய நகர பஸ்களுக்கான பயணச்சீட்டை கட்டாயம் விநியோகிக்குக!

## பொலிஸார் அறிவுறுத்து



(எம்.ஏ.எம்.ஹசனார்)

அரசாங்கத்தின் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் வெல்லவாய நகரிலிருந்து புறநகரங்களுக்குச் செல்லும் அனைத்து பஸ்களிலும் பயணிகளுக்கான செல்லுபடியாகும் டிக்கெட்டை கட்டாயம் விநியோகிக்குமாறு வெல்லவாய போக்குவரத்துப் பொலிஸார் ஆலோசனை விடுத்துள்ளனர்.

இதன்படி இனிமேல் இப்பிரதேசத்திலிருந்து வேறு புறநகரங்களுக்குச் செல்லும் அனைத்து தனியார் பஸ்களுக்கும் டிக்கெட் விநியோகிக்குமாறும் அடிக்கடி பொலிஸ் நிலையத்தால் சோதனை செய்யப்படுமெனவும் வெல்லவாய பொலிஸ் பொறுப்பதிகாரி உள்ளிட்ட போக்குவரத்துப் பொலிஸார் பணிப்புரை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கசிப்புடன் இராணுவச் சிப்பாய் கைது

ஊவா பரணகம - கடகொட பிரதேசத்திலுள்ள இராணுவச் சிப்பாயொருவரின் வீட்டைச் சுற்றிவளைத்து வீட்டில் வைத்து விற்பனைக்காக கசிப்பு காய்ச்சிய குறித்த நபரொருவரை அம்பகஸ்தோவ பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இராணுவச் சிப்பாய் விடுமுறையில் வீட்டுக்குச் சென்று நீண்ட நாட்களாக இந்த நடவடிக்கையை மேற்கொண்டு வந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

18,000 கிராம் கோடா மற்றும் மதுபானம் காய்ச்சுவதற்குப் பயன்படுத்தப்பட்ட பல உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப் பட்டுள்ளன. இந்தச் சுற்றிவளைப்பின்போது தப்பிச் சென்ற மற்றுமொரு சந்தேக நபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்ட சத்துர சமரசிங்க தமது கடமைகளைப் பொறுப்பேக முன்னர் சங்கத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களுடன் கண்டியிலுள்ள தலதா மாளிகையிலும் கண்டியிலுள்ள கதிர்காமம் முருகன் ஆலயத்திலும் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டதைப் படங்களில் காணலாம். (டி.வசந்த்)

# வெடுக்குநாறிமலையில் சிவராத்திரி தினமன்று பகலில் மாத்திரம் பூஜைகள் செய்வதற்கு ஏற்பாடு

## பூஜை விபரங்களைப் பெற்ற நெடுங்கேணி பொலிஸார்

வவுனியா வடக்கு, வெடுக்குநாறி மலையில் சிவராத்திரி தினம் தொடர்பாக ஆலய பூசகர் மதிமுகராசா மற்றும் முக்கியஸ்தரான பூபாலசிங்கம் ஆகியோர் நெடுங்கேணி பொலிஸாரால் அழைக்கப்பட்டு பூஜை விபரங்கள் பெறப்பட்டுள்ளன.

வவுனியா வடக்கு, வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் மற்றும் அதனை அண்டியுள்ள பகுதிகள் தொல்பொருள் திணைக்களத்துக்குக் கீழ் உள்ளதாகத் தெரிவித்து, அந்தத் திணைக்களம் மற்றும் நெடுங்கேணி பொலிஸாரால் பொதுமக்கள் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு பல்வேறு தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

இந்நிலையில், கடந்த வருடம் சிவராத்திரி தினமன்று மாலை 06 மணிக்கு பின்னர் சிவராத்திரி பூஜைகளைச் செய்ய முற்பட்ட 08 பேர் நெடுங்கேணி பொலிஸாரால் அடாவடியான முறையில் கைதுசெய்யப்பட்டனர். இது தமிழ் மக்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியதுடன், பொலிஸாரின் செயற்பாடுகளுக்கெதிராக பல்வேறு போராட்டங்களும் இடம்பெற்றிருந்தன.

இந்நிலையில், அது தொடர்பான வழக்கு வவுனியா நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது, கைது செய்யப்பட்ட 08 பேரையும் வழக்கிலிருந்து முழுமையாக விடுதலை செய்த நீதிபதி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கையும் தள்ளுபடி செய்தார்.

இந்நிலையில், இம்முறை சிவராத்திரி தினம் தொடர்பாக ஆலயப் பூசகர் மற்றும் முக்கியஸ்தரொருவர் நெடுங்கேணி பொலிஸாரால் அழைக்கப்பட்டு அவர்களிடம் விபரங்கள் பெறப்பட்டுள்ளன.

இது தொடர்பாக ஆலயப் பூசகர் மதிமுகராசாவிடம் கேட்டபோது, இம்முறை சிவராத்திரி விரத பூஜைகளை காலை முதல் மாலை 06 மணிவரை முன்னெடுப்பதற்கு தாம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்தார்.

06 மணியின் பின்னர் பிறிதொரு பகுதியில் சிவனுக்கான இரவு அனுஷ்டானங்களைச் செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சிவராத்திரி தினத்தன்று வெடுக்குநாறி மலையில் பூஜைகள் சிறப்பாக இடம்பெறுமென அவர் தெரிவித்தார்.

## கிளீன் ஸ்ரீலங்கா செயற்றிட்டத்தின் கீழ் மன்னார் கடற்கரையை சுத்தப்படுத்தும் நிகழ்வு





(ஜோசப் நயன்)

தேசிய ரீதியாக நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் கிளீன் ஸ்ரீலங்கா செயற்றிட்டத்தின் ஊடாக கரையோரங்களை சுத்தப்படுத்தும் செயற்றிட்டமானது மன்னார் மாவட்டத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (23) வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.


மன்னார் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கீரி கடற்கரை பகுதியைச் சூழவுள்ள கரையோரங்கள் முதற்கட்டமாக சுத்தப்படுத்தப்பட்டன.

மன்னார் பிரதேச செயலகத்தின் ஒழுங்கமைப்பில் மன்னார் மாவட்ட செயலகம், மன்னார் நகரசபை, பிரதேச சபை, கடற்படைப் பொலிஸார், இராணுவத்தினர் இணைந்து குறித்த சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கனகேஸ்வரன், தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கேதீஸ்வரன், மன்னார் பொலிஸ் அத்தியட்சகர் சந்திரபால உட்பட பிரதேச செயலாளர்கள், நகரசபை, பிரதேச சபைச் செயலாளர்கள், அரச உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக நூற்றுக்கணக்கான பொதுமக்கள் இணைந்து சுத்தப்படுத்தல் பணிகளில் ஈடுபட்டனர்.

அதேநேரம், மன்னார் பிரதான பாலம், சௌத்பார் கடற்கரைப் பகுதிகளும் கிளீன் ஸ்ரீலங்கா செயற்றிட்டத்தினூடாக சுத்தம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் ரயில் மீது தாக்குதல் மேற்கொண்ட மூவர் கைது



யாழ்ப்பாணம், சாவகச்சேரி பகுதியில் ரயில் மீது தொடர்ச்சியாக கல்வீச்சுத் தாக்குதலை நடத்தி வந்த மூவர் நேற்று முன்தினம் (22) கைதுசெய்யப்பட்டனர்.

யாழ். மாவட்ட பொலிஸ் மா அதிபர் காலிங்க ஜயசிங்கவின் கட்டளைக்கிணங்க மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவின் தகவலுக்கமைய மூன்றுபேர் யாழ்ப்பாண பொலிஸாரால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தை நோக்கி யாழ்தேவி செல்லும்போது குறித்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. அரியாலை பகுதியில் வைத்து கல்லெறிவதை ரயிலில் பயணித்த ஒருவர் தற்செயலாகப் படம் பிடிக்கும்போது அந்தத் தாக்குதல் வீடியோவில் பதிவாகியது.

ஏற்கனவே நடத்திய கல்வீச்சுத் தாக்குதலில் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார். இது குறித்து யாழ்ப்பாண ரயில் நிலையமும் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து குறித்த விடயம் யாழ். மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

13 - 15 வயதுகளுக்குட்பட்ட சிறுவர்கள் மூவர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் பாடசாலைக்கும் ஒழுங்கீனமானவர்கள். அதேவேளை, ஏற்கனவே சிறு சிறு குற்றங்களையும் புரிந்தவர்களெனப் பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்களது பெற்றோரின் உதவியுடன் சிறுவர் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

# முச்சக்கரவண்டி மீது முறிந்து விழுந்த மரம்

## மயிரிழையில் தப்பிய பெண்





வவுனியா- குருமண்காடு பகுதியில் முச்சக்கரவண்டியொன்றின் மீது மரம் முறிந்து விழுந்ததில் முச்சக்கரவண்டி முழுமையாக சேதமடைந்துள்ளதுடன், பெண்ணொருவர் மயிரிழையில் உயிர்தப்பியுள்ளார்.

நேற்று (23) இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா - மன்னார் வீதி, குருமண்காடு சந்திப் பகுதியிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றின் முன்னால் முச்சக்கரவண்டியொன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அதில் பெண்மணியொருவரும் இருந்துள்ளார். இதன்போது தனியார் வைத்தியசாலை முன்பாக வீதியில் நின்ற மரமொன்று திடீரென முறிந்து விழுந்துள்ளது.

மரம் முறிந்து விழுவதை அவதானித்த குறித்த பெண்மணி, முச்சக்கர வண்டியிலிருந்து இறங்கி ஓடியதால் பாதிப்புகளின்றி தப்பியுள்ளார். முச்சக்கர வண்டி மீது மரம் விழுந்ததால் முச்சக்கரவண்டி முழுமையாக சேதமடைந்துள்ளது. பின்னர் மரத்தின் கிளைகளை வெட்டி முச்சக்கரவண்டியை மீட்டபோதும் அது முழுமையாக சேதமடைந்துள்ளமை தெரியவருகிறது.

# கலை இலக்கிய நிகழ்வும் மாருதம் சஞ்சிகை வெளியீடும்





வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் 28ஆவது ஆண்டு நிறைவு விழாவும் மாருதம் சஞ்சிகை வெளியீடும் நேற்று முன்தினம் (22) வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் இடம்பெற்றன.

தமிழறிஞர் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பல்வேறு கலை, கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றதோடு, சாதனையாளர் கௌரவிப்பும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் த.மங்களேஸ்வரன் கலந்து கொண்டதோடு மாருதம் சஞ்சிகையின் அட்டைப்படத்தை இம்முறை அலங்கரித்த யாழ். பல்கலைக்கழக ஆங்கிலத்துறை விரிவுரையாளர் பேராசிரியர் ஸ்ரீ கணேஷன் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

# லாஹூரில் இந்திய தேசிய கீதம் இசைக்கப்பட்டதற்கு ஐ.சி.சியிடம் விளக்கம் கோரியுள்ள பாகிஸ்தான்

நடப்பு சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் போட்டி நடைபெற்ற லாஹூர் மைதானத்தில் இந்திய தேசிய கீதம் ஒலித்தமை சர்ச்சையை கிளப்பியுள்ள நிலையில் இதற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விளக்கம் அளிக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளது.

அதாவது, சம்பியன்ஸ் டிராபி போட்டியில் இந்திய தேசிய கீதம் இசைக்கப்பட்டதற்கு ஐ.சி.சி. உரிய விளக்கம் அளிக்க வேண்டும். இந்தியா தனது போட்டிகளை பாகிஸ்தானில் விளையாடவில்லை என்பதால் அவர்களது தேசிய கீதம் எப்படி தவறாக இசைக்கப்பட்டிருக்கும் என்பதற்கு உரிய விளக்கம் தேவை என ஐ.சி.சிக்கு அழுத்தம் கொடுத்துள்ளதுடன் இதுதொடர்பில் கடிதம் ஒன்றையும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை எழுதியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இந்தியாவிடம் வீழ்ந்த இலங்கை



கிரிக்கெட் உலகிலிருந்து ஓய்வு பெற்ற வீரர்கள் பங்கேற்கும் முதலாவது சர்வதேச மாஸ்டர்ஸ் ரி20 லீக் தொடரில் இந்திய அணியுடனான ஆட்டத்தில் இலங்கை அணி 04 ரன்களினால் தோல்வியை தழுவியது.

இந்தியா, இலங்கை, அவுஸ்திரேலியா, வெஸ்ட் இண்டீஸ், இங்கிலாந்து மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய 06 அணிகள் பங்கேற்றுள்ள குறித்த தொடரின் நேற்று முன்தினம் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் சச்சின் தலைமையிலான இந்தியா மாஸ்டர்ஸ் அணி, குமார் சங்கக்கார தலைமையிலான இலங்கை மாஸ்டர்ஸ் அணியை எதிர்கொண்டது.

முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி 20 ஓவர்கள் முடிவில் 04 விக்கெட்டுகளை இழந்து 222 ரன்கள் குவித்தது. பின்னர் 223 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய இலங்கை அணிக்கு கடைசி ஓவரில் 09 ரன்கள் தேவைப்பட்டன. ஆனால் இலங்கை அணி 04 ரன்களை மட்டுமே பெற்று 20 ஓவர்கள் முடிவில் 09 விக்கெட்டுகளை இழந்து 218 ரன்கள் மாத்திரம் அடித்து தோல்வியை தழுவியது.

# பென்சின் சிக்ஸர் ட்ரோபி கிண்ணத்தை கைப்பற்றியது கல்பனா

*(மருதமுனை, பெரியநீலாவணை செய்தியாளர்கள்)*

மருதமுனையிலிருந்து 15 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றிய பென்சின் விளையாட்டுக் கழகத்தின் சிக்ஸர் ட்ரோபியின் இறுதிப் போட்டி கடந்த வாரம் கழகத்தின் தலைவர் ஏ.பி. றனூஸ் தலைமையில் மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டுத் தொகுதியில் இடம்பெற்றது.

05 ஓவர்கள், 06 பேர் கொண்ட இச்சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் ஜமைக்கன் விளையாட்டுக் கழகத்தை 74 ஓட்டங்களினால் வீழ்த்திய கல்பனா விளையாட்டுக் கழகம் சம்பியன் பட்டம் வென்றது.



இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சராபத் பிஸ்கிங் நிறுவனத்தின் உரிமையாளர் வீ.எம். றியாஸ், கௌரவ அதிதியாக சப்னம் ஜஸ் நிறுவனத்தின் உரிமையாளர் ஏ.டபிள்யூ.எம். நபீர், அதிதிகளாக மருதமுனை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் ஏ. மனாஸ், செயலாளர் எம்.ஐ. நஜ்முல் றியாஸ், கழகத்தின் ஊடக, சமூக சேவைப் பிரிவின் இணைப்பாளரும் அபிவிருத்தி உத்தியோகத்தருமான றாசிக் நபாயிஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

# ரன் சேஸிங்கில் சாதனை படைத்த ஆஸி.



ஒருநாள் கிரிக்கெட்டில் நடப்பு உலக சம்பியனான அவுஸ்திரேலிய அணி, ஐ.சி.சி. நடத்தும் 50 ஓவர்கள் கிரிக்கெட் தொடரில் ரன் சேஸில் வரலாற்று சாதனை படைத்து இங்கிலாந்து அணியை வீழ்த்தியது.

நடப்பு சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் 4ஆவது போட்டியில் நேற்று முன்தினம் அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து அணிகள் விளையாடின. முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 50 ஓவர்களில் 08 விக்கெட்டுகள் இழப்புக்கு 351 ரன்கள் சேர்த்தது.

352 ரன்கள் என்ற கடினமான இலக்கை நோக்கி பதிலெடுத்தாடிய அவுஸ்திரேலியா 47.3 ஓவர்களில் 05 விக்கெட்டுகள் இழப்புக்கு 356 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. ஆஸி. அணியின் வெற்றிக்கு துடுப்பாட்டத்தில் ஜோஸ் இங்லிஸ் தனது கன்னி சதத்தை பதிவு செய்து 120 ஓட்டங்களையும் அலெக்ஸ் கேரி 69 ஓட்டங்களையும் மெத்யூ சோர்ட் 63 ஓட்டங்களையும் குவித்தனர்.

# விளையாட்டுத் துளிகள்

2025 ஐ.பி.எல். ஏலத்தில் ஆப்கானிஸ்தான் அணியின் சுழற்பந்து வீச்சாளரான அல்லா கசன்பரை மும்பை இந்தியன்ஸ் அணி ரூ.4.8 கோடிக்கு வாங்கியது. இந்நிலையில் காயம் காரணமாக அல்லா கசன்பர் இந்த சீசனிலிருந்து விலகியுள்ளார். அவருக்கு பதிலாக மற்றொரு ஆப்கானிஸ்தான் சுழற்பந்து வீச்சாளரான முஜீப் உர் ரஹ்மானை மும்பை இந்தியன்ஸ் நிர்வாகம் அணியில் சேர்த்துள்ளது.

★★★★★★★★★★★★★★★★★★★★★

இந்தியாவில் நடைபெற்றுவரும் 3ஆவது மகளிர் ரி20 பிரிமியர் லீக் தொடரில் ஹர்மன்ப்ரீத் கவுர், டெல்லியுடனான ஆட்டத்தில் 42 ரன்கள் எடுத்ததன் மூலம் ரி20 கிரிக்கெட்டில் 8,000 ரன்களை கடந்த 2ஆவது இந்திய வீராங்கனை என்ற சாதனையை படைத்தார். இந்தப் பட்டியலில் ஸ்மிருதி மந்தனா 8,349 ரன்கள் எடுத்து முதலிடத்தில் உள்ளார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

இந்தியாவில் நடைபெற்றுவரும் மகளிர் பிரீமியர் லீக்கில் யு.பி. வாரியர்ஸ் அணியில் விளையாடிவரும் இலங்கை அணியின் தலைவி சமரி அத்தபத்து இறுதிக்கட்ட போட்டிகளில் விளையாட முடியாத சூழல் உருவாகியுள்ளது. காரணம் இலங்கை மகளிர் அணி நியூஸிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளதால் சமரி இலங்கை அணியுடன் இணையவுள்ளார். 26ஆம் திகதி வரையிலான போட்டிகளில் சமரி விளையாடுவார் எனக் கூறப்படுகிறது.

★★★★★★★★★★★★★★★

நடப்பு சம்பியன்ஸ் கிண்ணத் தொடருடன் ஒருநாள் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்த ஆப்கானிஸ்தான் அணியின் முன்னணி வீரரான முஹமட் நபி தனது ஓய்வு முடிவை தற்போது திரும்பப் பெற்றுள்ளார். ஒருநாள் போட்டிகளில் தனது மகனுடன் சேர்ந்து விளையாட விருப்பம் ஏற்பட்டுள்ளதால் முடிவை மாற்றியுள்ளார். நபியின் மகனான ஹசன் ஐசாகில் (வயது 18) ஆப்கானிஸ்தான் அணிக்காக இளையோர் உலகக்கிண்ணத்தில் விளையாடினார். இவர் விரைவில் ஆப்கானிஸ்தான் அணியில் இடம்பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★

தனது சம்பியன்ஸ் கிண்ண அறிமுகப் போட்டியிலேயே சதம் அடித்த மற்றும் உலகப்போட்டியில் முதல் சதம் அடித்த தென்னாபிரிக்க வீரர் எனும் வரலாறு ரியான் ரிக்கெல்டன் படைத்தார். 28 வயதாகும் ரிக்கெல்டன் 7ஆவது ஒருநாள் போட்டியில் சதம் அடித்துள்ளார். மேலும் 06 அரைச்சதங்கள் விளாசியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

★★★★★★★★★★★★★★★★★★★★★

இங்கிலாந்துடனான ஆட்டத்தில் ஜோஷ் இங்லிஸ் வெறும் 77 பந்துகளில் சதமடித்து சம்பியன்ஸ் கிண்ண வரலாற்றில் அதிவேக சதமடித்த வீரர் என்ற சேவாக்கின் சாதனையை சமன் செய்தார். சேவாக் 2002ஆம் ஆண்டு நடைபெற்ற சம்பியன்ஸ் கிண்ணத்தில் இங்கிலாந்து அணிக்கு எதிராக 77 பந்துகளில் சதமடித்திருந்தார்.

# சம்பியன் பட்டம் வென்ற ரஷ்ய வீராங்கனை



**பல முன்னணி வீராங்கனைகள் பங்கேற்றிருந்த டுபாய் சர்வதேச டென்னிஸ் சம்பியன்ஷிப் தொடரில் ரஷ்ய வீராங்கனை மிர்ரா ஆண்ட்ரீவா சம்பியன் பட்டம் வென்றார்.**

**ஐக்கிய அரபு இராச்சியத்தில் கடந்த 14ஆம் திகதி ஆரம்பமாகிய டுபாய் சர்வதேச டென்னிஸ் சம்பியன்ஷிப் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டம் சனிக்கிழமை நடைபெற்றது. குறித்த இறுதிப்போட்டிக்கு ரஷ்ய வீராங்கனை மிர்ரா ஆண்ட்ரீவா மற்றும் டென்மார்க்கை சேர்ந்த கிளாரா டவுசன் ஆகியோர் தகுதிபெற்றனர்.**

**இதில் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய மிர்ரா ஆண்ட்ரீவா 7:6 மற்றும் 6:1 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றார்.**

# மரதன் ஓட்டத்தில் வெற்றிபெற்ற மாணவருக்கு துவிச்சக்கரவண்டி பரிசு



*(அட்டாளைச்சேனை செய்தியாளர்)*

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் இவ்வாண்டுக்கான இல்ல விளையாட்டுப் போட்டியின் முதல் போட்டி நிகழ்வாக மரதன் ஓட்டப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இப்போட்டியில் முதலாமிடம் பெற்ற பிர்தௌஸி இல்ல வீரர் ரி.றிஸ்கி அகமட் பெறுமதி மிக்க துவிச்சக்கரவண்டியினை பரிசாகப் பெற்றுக் கொண்டார்.

அதிபர் ஏ.எல்.நசீபா இக்பால் தலைமையில் பாடசாலை வளாகத்தில் ஆரம்பமான மெய்வல்லுநர் போட்டி நிகழ்ச்சிகளின் முதல் நிகழ்வாக மரதன் ஓட்டப்போட்டி சுமார் ஐந்து கிலோமீற்றர் தூரம் கொண்டதாக அமைந்திருந்தது.

பிர்தௌஸி, சீராஸி, கஸ்ஸாலி ஆகிய இல்லங்களைச் சேர்ந்த சுமார் 30 மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்றினர். இப்போட்டியில் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்ட வீரருக்கு பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் எப்.ஏ.குத்தூஸ் மூலம் அன்பளிப்புச் செய்யப்பட்ட துவிச்சக்கரவண்டி பரிசாக வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வின்போது பிரதி அதிபர்களான எம்.ஏ.சலாகுதீன், என்.எம்.சாலிஹ், பாடசாலை அபிவிருத்திக் குழு செயலாளர் சபூர் ஆதம், பழைய மாணவர் சங்கத்தினர், ஆசிரியர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள், துறைசார் முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் இல்ல மெய்வல்லுனர் போட்டிகள்




*(பு. கஜிந்தன்)*

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் அண்மையில் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன. விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டு, ஒலிம்பிக் தீபம் ஏற்றி வைக்கப்பட்டு, அணிநடையுடன் நிகழ்வானது ஆரம்பமாகியது.

அதனைத் தொடர்ந்து சுவட்டு நிகழ்வுகள், ஏனைய நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன. கல்லூரியின் முதல்வர் எம்.அன்ரன் அமலதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த விளையாட்டுப் போட்டி நிகழ்வில் பிரதம அதிதியாக தீவக கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்லையா இளங்கோ கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு விருந்தினராக மரியதாஸ் டினோசன், கௌரவ விருந்தினராக ஊர்காவற்றுறை மக்கள் வங்கியின் முகாமையாளர் திருமதி சசிகலா கவீஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பித்ததுடன், ஆசிரியர்கள், அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## CHAMPIONS ICC TROPHY 2025 - PAKISTAN இன்றைய போட்டிகள்

**போட்டி இல - 06**
**குழு - A**
BANGLADESH — **பங்களாதேஷ் VS நியூஸிலாந்து** — NEW ZEALAND

**ராவல்பிண்டி - பி.ப. 2.30 மணி**

**முடிவு**
**போட்டி இல - 04**
AUSTRALIA — **அவுஸ்திரேலியா VS நியூஸிலாந்து** — NEW ZEALAND

**ஆஸி. 05 விக்கெட்டுகளினால் வெற்றி**




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7